கோண்டாவில் தில்லையம்பதி

# மத்திய கிராம முன்னேற்றச் சங்கம்

மத்திய சனசமூக நிலையம்

50வது அகவையில்

# பொன் விழா

## சிறப்பு மலர் - 2010





**Published by:**

*Central Rural Development Society*
*&*
*Central Community Centre.*

கோண்டாவில் தில்லையம்பதி

மத்திய கிராம முன்னேற்றச் சங்கம்

*மத்திய சனசமூக நிலையம்*

# பொன்விழா

## சிறப்பு மலர்



## 1960-2010

**நிலையத்தின் 50வது அகவையையொட்டி**

**வெளியாகும் சிறப்பிதழ்**

# பொன்விழா சிறப்பு மலர்


| | | |
|---|---|---|
| நூல் | : | பொன்விழா சிறப்புமலர் |
| இதழாசிரியர் | : | என்.பிறேமசீலன் |
| பதிப்புரிமை | : | விழாக்குழு தில்லையம்பதி கோண்டாவில் |
| வெளியீடு | : | மத்திய கிராம முன்னேற்றச் சங்கம்<br>மத்திய சனசமூக நிலையம் |
| பக்கங்கள் | : | xiv+41 |
| பதிப்பு | : | 2010 தை |
| பிரதிகள் | : | 300 |
| பதிப்பகம் | : | மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்<br>முருகேசர் ஒழுங்கை,<br>நல்லூர்.<br>021 2229285 |
| மலர்க்குழு | : | திரு.ஜ.யோகராஜா<br>செல்வன்.மு.தீபன்<br>செல்வன்.ந.சுபேசன்<br>செல்வன்.கு.மயூரன் |

# நிலைய கீதம்

இராகம் : சகானா

தாளம் : ஆதி

வாழ்த்துகின்றோம் வாழ்த்துகின்றோம்
வாழ்த்துகின்றோம் அன்னையே
வளம் நிறைந்த வாழ்வில் எம்மை
வாழ வைக்கும் உன்னையே!

(வாழ்த்துகின்றோம்....)

பைந்தமிழ் கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தாயே
பலகலை உதவி எம்மை வளர்த்தெடுப்பாய் நீயே
செந்தமிழ் நாவில் இனிக்க செம்மொழி அருள்வாயே
சுடரும் எங்கள் மனக்கோயிலிலே என்று மிருப்பாயே!

(வாழ்த்துகின்றோம்....)

தில்லையம்பதியில் ஊராரெல்லாம் சீராட்டி வளர்க்க
தேடிவரும் அன்பர்க் கெல்லாம் பயனளித்தாய் செழிக்க
உலகமெல்லாம் நின்னிடத்தே தொண்டாற்றியோர் சிறக்க
உரிமையில் துணைசெய்தாயே அன்பு நாம் சுரக்க!

(வாழ்த்துகின்றோம்....)

பாலர் பாடசாலையும் அறிவூட்டிடும் அறநெறிப் பாடசாலையும்
பல்கலை சிறக்க கல்வி மேம்பாட்டுப் பேரவையும் இணைத்தாயே
வாழும் வாழ்வுடன் கைவேலை கமவேலை பயில்வோர்க்காய்
வளர்ந்தாய் மாதர் சங்கமுடன் விளையாட்டுக்கழகமும் தந்தாயே!

(வாழ்த்துகின்றோம்....)

கற்பகம் போல் எம்மவர்க்கு கதியருள் பாற்கடலே
காலமெல்லாம் நிலைத்து நிற்கும் ஒளிவிளக்கு மலையே
சொற்புகழார் கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்க
அன்னையே நீ பல்லாண்டு பல்லாயிரமாண்டு வாழி!
அன்னையே நீ பல்லாண்டு பல்லாயிரமாண்டு வாழி!
அன்னையே நீ பல்லாண்டு பல்லாயிரமாண்டு வாழி!

ஆக்கியோன் : என்.பிறேமசீலன்
(கோண்டாவில்)



# சமர்ப்பணம்

சமூகப்பணி, கல்விச் செல்வத்தோடு
தெய்வீக வாழ்வையும்
எமக்களித்த பெரியோர்கள்,
நீங்கள் ஏற்றி வைத்த தீபம்
50 ஆண்டுகளாக ஆயிரக் கணக்கான
சுடர்களைத் தோற்றுவித்துள்ளது.
அச்சுடர்களாய நாம் எமது இதய நன்றியை
உங்களுக்கு இனிதே சமர்ப்பிக்கின்றோம்.
உங்களது நல் ஆசிகள் எமக்கு
என்றும் உரியதாகுக ...!

மத்திய கிராம முன்னேற்றச் சங்கம்,
மத்திய சனசமூக நிலையம்.



சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதியில்
சிறப்புற்றோங்கும் உமையவளாம் அன்னை சிவகாமியே!
பார்போற்றும் பரவசத்தால் காலமெல்லாம் உன்னருகோடிணைந்து
பாங்குடனே மிளிர கோபுரமாய் காணவைத்தாயே!
கற்றவர்க்கோர் உள்ளொளியாம் கற்பகமே சிவகாமியே
கல்லுதற்கோ அம்மா கல்லானாய் கழலடிக்கே அன்புமலர்
சரணம்! சரணம்!! சரணம்!!!

# நிலையத்தின் நோக்கு ....

**மாறிவருகின்ற உலக மாற்றங்களுக்கேற்ப**

**முகங்கொடுப்பதுடன்**

**உள்ளார்ந்த அதியுயர் மட்டத்தை அடைவதனூடாக**

**சமூக விழுமியங்களைப் பேணி**

**கலை, கலாசார, நற்பண்புகள் ஆளுமை கொண்ட**

**சமூகத்தை உருவாக்குதல்.**

# நல்லை ஆதீன முதல்வரின்

## அருளாசிச்செய்தி



**அன்புள்ளங்களிற்கு,**

கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச் சங்கம், மத்திய சனசமூக நிலையம் தனது 50வது ஆண்டு பொன்விழாவை கொண்டாடுவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். 50 வருடங்களாக இச்சனசமூக நிலையம் கோண்டாவில் மக்களிற்கு தேவைகளை நிறைவாகச் செய்து இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது. மக்கள் வாழ்வை வளமாக்குவதற்குத் தேவைகள் பல உண்டு. அவற்றை இனம் கண்டு சேவையாற்றுவதே சனசமூக நிலையமாகும். அறிஞர்களும், சிந்தனையாளர்களும் வாழ்ந்த கோண்டாவில் பிரதேசம் நல்ல கைங்கரியங்களையும், ஆன்மீக பொருளாதார கைங்கரியங்களையும் செய்கின்ற ஊராகும். இங்கு கோண்டாவில் தில்லையம்பதி பகுதியில் ஒரு சனசமூக நிலையம் அமைத்து மக்களின் தேவைகளை நிறைவாகச் செய்து கொண்டிருக்கிறது. இன்று 50வது அகவையை அடைந்திருக்கும் சனசமூக நிலையம் இன்னும் பல ஆண்டுகள் வளர்ந்து பல வளர்ச்சிகளைக் கண்டு மக்களிற்கு சேவையாற்ற இறைவனை பிரார்த்திக்கின்றோம். இப்பணியில் ஈடுபட்டிருக்கும் தலைவர், செயலாளர், பொருளாளர், உறுப்பினர்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

வாழ்க வளமுடன்

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
ஆதீன முதல்வர்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்
பருத்தித்துறை வீதி, நல்லூர்.

# ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி



கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச் சங்கம், மத்திய சனசமூக நிலையம் தனது பொன்விழாக் காணும் பெருமையை அடைந்துள்ளமையைக் கண்டு மனம் மகிழ்ந்து ஆசி வழங்குவதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

இச்சமூக நிறுவனம் மிகுந்த நெருக்கடிகளுக்கு உட்பட்டு வாழ்ந்த மக்களின் சமூக மேம்பாட்டை இலக்காகக் கொண்டு 50 வருடத்திற்கு முன்னால் தூரநோக்கில் உருவாக்கப்பட்டது.

இந்நிறுவனம் உருவாகிய நோக்கத்தை முறையாகவே பயன்படுத்தியதன் ஊடாக இன்று இதன் அங்கத்துவ மக்கள் சமூக பொருளாதார கல்வி கலாச்சார மேம்பாடடைந்து சமூகத்தில் உயர்ந்த நிலைக்கு மதிக்கப்படுவதற்கு இச்சனசமூக நிலையம் ஆற்றிய பங்கும் பணிகளும் பாராட்டுக்குரியவை.

உலகின் நவீன போக்கிற்கமைய மேலும் வளங்களை உங்வாங்கி, வரலாற்றுப் பதிவுகளை ஏற்படுத்தக் கூடிய சமுதாயம் ஒன்றை உருவாக்கி, அறிவியலாலும் அறநெறி களாலும் உயர்ந்து விளங்கும் மனிதப் பண்பு கொண்ட புதிய சமுதாயத்தை உருவாக்குவதற்கு மேலும் கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் உழைக்க வேண்டும் என இந்நாளிலே எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் வழங்கி நூறாவது ஆண்டு விழாவை இந்நிறுவனம் கொண்டாடுகின்ற பொழுது தான் சார்ந்த மக்களின் தேவைகளை முழுமையாக நிறைவேற்றுகின்ற நிறுவனமாக உயர்வதற்கு இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

**சிவஸ்ரீ இ.சுந்தரரேஸ்வரக் குருக்கள்**
பிரதம குரு,
தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி
அம்பாள் திருக்கோயில்

# பல்கலைக்கழக துணைவேந்தரின் ஆசிச்செய்தி



கிராமங்களின் மேம்பாட்டிலேயே எங்கள் சமூகத்தினதும் பண்பாட்டினதும் மேம்பாடு தங்கியுள்ளது. எங்கள் கிராமங்களிடையே நிலவும் சமமின்மைகளை அகற்றி எல்லோருக்கும் வாழ்வு என்ற சமூக நீதியை நிலைநாட்டுதல் எமக்கான காலக் கடமையாகவுள்ளது.

இந்தவகையில் "அன்ன சத்திரம் ஆயிரம் அமைத்தலினும் ஆங்கோர் ஏழைக்கு அறிவூட்டல் மேல்" எனும் பாரதியின் வேண்டுதலுக்கு அர்த்தம் தந்து, கிராமத்து ஏழைச் சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்காய் அரும்பணியாற்றி வரும் கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் தன் பொன்விழா நிறைவினைக் கொண்டாடும் செய்தி பெருமகிழ்ச்சி தருகின்றது.

சூழமைவின் நெருக்கடிகள், அலைவுகள், உலகமயமாக்கல் அலைகளிடை தளர்ந்து விடாமல் சமுதாய உணர்வுடன் செயற்படும் சங்கத்தின் தலைவர் திரு.சி.ஆனந்தராசா, நிர்வாக குழுவினர், மற்றும் சமூகப் பணிகளில் இணைந்துள்ள அனைவருக்கும் என் அன்பான வாழ்த்துக்கள்.

துணைவேந்தர் பணிமனை<br>திருநெல்வேலி<br>யாழ்ப்பாணம்.

**பேராசிரியர் என்.சண்முகலிங்கம்**<br>துணைவேந்தர்

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



நீர்வளமும், நிலவளமும் ஒருங்கிணைய, பசுமையான தோட்ட வெளிகளினால் எழிலுடன் இலங்கும் கோண்டாவில் கிராமத்தின் வளர்ச்சியை நோக்காய் கொண்டு அமைக்கப்பட்ட "மத்திய கிராம முன்னேற்றச் சங்கம்" கிராமத்தின் வளர்ச்சியுடன் தானும் வளர்ந்து ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து பொன்விழாக் காண்கின்றது.

கோண்டாவில் வடக்கு "மத்திய கிராம முன்னேற்றச் சங்கம்" சமுதாயத்தின் சகல தரப்பினரையும் பிரதி நிதித்துவப்படுத்தும் வகையில் தனது செயற்பாடுகளை ஒழுங்கமைத்துள்ளது. காலத்தின் தேவைகருதி, மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மாலை நேர வகுப்புக்கள், இலவச பாலர் பாடசாலைகள் நடத்துதல், தையல், மின்னிணைப்பு பயிற்சிகளை வழங்குவதன் மூலம் சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தல், சிரமதானப் பணிகளின் மூலம் சிறந்த சேவைகளை வழங்கல், விளையாட்டு நிகழ்வுகளை ஊக்குவித்தல் என்பவற்றோடு வசதி குறைந்த கிராமத்து மக்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்வதில் தம்மாலான பங்களிப்புக்களைச் செய்தல் என்று இன்னோரன்ன நன்மைகளைத் தனது கிராமத்திற்கு வழங்கி வருவதன் மூலம் இச்சங்கம் மக்கள் மத்தியில் நிலையானதொரு இடத்தைக் கொண்டுள்ளது.

"எண்ணியார் எண்ணியாங்கு எய்துப, எண்ணியார் திண்ணியராகப் பெறின்" காலத்தை வென்று நிற்கும் இக் கருத்திற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாய் தன் பணியில் தளராது நின்று, பொன்விழாக் காணும் கோண்டாவில் "மத்திய கிராம முன்னேற்றச் சங்கம்" தன் பயனுள்ள பணிகளைப் பாங்குறத் தொடர்ந்திட இப்பொன்விழா நாளில் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

**க.கணேஷ்**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்,**
**யாழ் மாவட்டம்.**

# பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



நல்லூர் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் கிராமத்தில் அமைந்துள்ள மத்திய கிராம முன்னேற்ற சங்கம் இவ் வருடம் தனது பொன்விழாவைக் கொண்டாடுவது அறிந்து அகமகிழ் வடைகின்றேன்.

சைவமணங்கமழும் கோண்டாவில் கிராமத்திலே புகழ்பெற்ற தில்லையம்பதி ஆலயத்தின் முன்றலிலே அமைந்துள்ள இச்சங்கம் கிராமத்தின் சமுதாயத்திற்கு அளப்பரிய சேவைகள் செய்து வருவது பற்றி நான் அறிந்துள்ளேன். இந்தவகையிலே பெண்கள் மேம்பாட்டுக்கான சேவைகள், இளைஞர் சுயதொழில் ஊக்குவிப்பு பணிகள், முதியோர்களைக் கௌரவிக்கும் வருடாந்த முதியோர்தின விழாக்கள் நடாத்தல், பாலர் பாடசாலை நடாத்துதல் போன்ற பயன்மிக்க செயற்பாடுகள் மட்டுமன்றி திடீரென ஏற்படும் அனர்த்தங்கள் குறிப்பாக "நிஷா" புயல் போன்ற வேளைகளில் கோண்டாவில் கிராம மக்களுக்கு இக்கிராம முன்னேற்றச்சங்கம் ஆற்றிய பணிகள் போற்றத்தக்கவையாகும்.

மேலும் கடந்த 50 வருடங்களாக கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தினை தோற்றுவித்து பல இன்னல்களுக்கும் மத்தியில் இச்சங்கத்தை இயக்கி வழிநடத்திய நிர்வாக சபையினரின் சேவை பாராட்டத்தக்கதாகும். இச்சங்கத்தின் செயற்பாடு களினால் கோண்டாவில் கிராமத்தில் கல்வி விழிப்புணர்வு ஏற்பட்டு சமுதாயத்தில் முன்னேற்றம் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அந்தவகையில் மேற்படி மத்திய கிராம முன்னேற்றச்சங்கமானது கடந்தகால சேவைகளைப் போன்று எதிர்காலத்திலும் பயன்தரவல்ல பல சேவைகளைச் செய்து கோண்டாவில் கிராமத்தினை யாழ்ப்பாணத்தின் முன்னுதாரணமிக்க முன்னேற்றகரமான கிராமமாக திகழ பாடுபடல் வேண்டுமென கேட்டுக் கொண்டு இச்சங்கத்தையும் அதன் நிர்வாக சபையினரையும் உளம் நிறைந்து வாழ்த்துகின்றேன்.

**பா.செந்தில்நந்தனன்,**

பிரதேச செயலர்,

நல்லூர்.

# வணிகபீட பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி



தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஐம்பது ஆண்டுகால நிறைவை முன்னிட்டு வெளிவரும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடை கின்றேன். எந்தவொரு சமூகசேவை அமைப்பும் ஐம்பது ஆண்டுகள் நிலைத்திருந்து பொன்விழாக் காண்பதென்பது சாதாரண விடையமாகாது. அசாதாரண சூழ்நிலையில் கடந்த மூன்று தசாப்தங்களாக மூழ்கியிருந்த பிரதேசத்தில் சேவையாற்றிப் பொன்விழாக் காணும் தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தின் பணிகள் அக்கிராமத்தைச் சேர்ந்தவன் என்றவகையில் என்னால் நன்கு அவதானிக்கப்பட்டு வந்துள்ளன. தனது அளப்பரிய சேவையின் மூலமே மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் மக்கள் மனதை வென்றிருப்பது பலகாலத்தின் தேவைக்கேற்ப சேவையாற்றியதன் மூலம் நிலைத்திருக்கின்றது எனக் கூறினால் அது மிகையாகாது.

தில்லையம்பதியில் வாழுகின்ற இளைஞர்கள் அப்பிரதேச அபிவிருத்தியின் மீது அக்கறை கொண்டிருப்பதனை நான் நன்கறிவேன், அத்தகைய நோக்கின் வெளிப்பாடே மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தின் வளர்ச்சியாகும். இது அப்பிரதேச மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதுடன் அம்மக்களை வளர்ச்சிப் பாதையில் அமைத்துச் செல்லவும் தயாராக உள்ளது. இப்பிரதேசத்தில் வாழும் இளைஞர்களின் அர்ப்ணிப்பான சேவையின் மூலம் வளர்ச்சி கண்டுவரும் மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் தொடந்தும் நிலைத்திருந்து அப்பிரதேச மக்களின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்ற எனது ஆவலை வெளியிடுவதுடன் அது மேலும் தனது சேவைப்பரப்பை விஸ்தரித்து வெளிநாட்டவரின் நிதியுதவியைப் பெற்று இப்பிரதேச இளைஞர்களின் ஒத்துழைப்புடன் பவளவிழா, நூற்றாண்டுவிழா என்பவற்றை காணவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் க.தேவராசா**
பீடாதிபதி
முகாமைத்துவ கற்கைகள்
வணிகபீடம்
யாழ் பல்கலைக்கழகம்

# கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் வாழ்த்துச் செய்தி




சமுதாயத்தின் விழுமியங்களையும் பண்பாடுகளையும் கிராமத்தில் கட்டமைப்புடன் பேணி வருவதில் சனசமூக நிலையத்தின் பங்கு இன்றியமையாதது.

அந்தவகையில் கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச் சங்கம், மத்திய சனசமூக நிலையம் 50 வருடங்கள் நிறைவு பெற்றது மகிழ்ச்சிக்குரியது. பாராட்டுக் குரியது. மக்களின் மனங்களில் நம்பிக்கையும், சமூக ஒற்றுமையும், சமூக பொருளாதார முன்னேற்றத்தில் அக்கறையும், ஆர்வமும் கொண்டு இயங்கும் நிலையம் மென்மேலும் அளப்பரிய சேவையை எமது சமுதாய மக்களுக்கு ஆற்றி வரவேண்டும்.

ஆலமரம் போல ஆயிரம் விழுதுகள் பரப்பி, மல்லிகை போல் மணம் வீசி, மக்கள் மனதில் நிறைந்த சேவையாற்றி நிலையான இடம்பிடிக்க வேண்டுமென்று மனம் நெகிழ்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கா.ஐங்கரவேள்**
கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்

# பிரதேச வைத்திய அதிகாரியின் வாழ்த்துச் செய்தி



மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் அவர்களின் தனிப்பட்ட மேம்பாட்டிற்காக உழைப்பதிலும், சமூக மட்ட வளர்ச்சியை துரிதமாக முன்னெடுத்துச் செல்வதிலும், சுற்றுச் சூழல் பராமரிப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் சனசமூக நிலையங்கள் ஆற்றி வரும் பங்களிப்பு மகத்தானதாகும்.

ஒரு சனசமூக நிலையமானது குறிப்பிட்ட சில ஆண்டுகள் இயங்குவதே பாரிய இடர்பாடாக இருக்கும் பொழுது 50 ஆண்டுகள் அது சேவையாற்றுவதென்பது பெருஞ் சாதனையாகும். இவ்வகையில் கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச் சங்கம், மத்திய சனசமூக நிலையம் தனது பொன்விழா ஆண்டை வெகுவிமரிசையாகக் கொண்டாடுவதும் அதனையொட்டிச் சிறப்பு மலர் ஒன்றை வெளியிட இருப்பதும் பெருமகிழ்ச்சிக்குரியதாகும்.

இம்மண் பரப்பிட அக மகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

Dr.வே.கனகரத்தினம்
பொறுப்பு வைத்திய அதிகாரி,
பிரதேச வைத்தியசாலை,
கோண்டாவில்.

# பிரதேச சபை செயலாளரின் வாழ்த்துச் செய்தி



நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் வலிகாமம் பிரதேசத்தில் அமைந்துள்ள கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் மத்திய சனசமூக நிலையம் தனது 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவைப் பொன்விழாவாகக் கொண்டாடுவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பிரதேசத்தில் இயங்கி வருகின்ற சனசமூக நிலையங்களுள் தற்போதைய காலத்தின் தேவை கருதி மக்களுக்கு வேண்டிய சகல அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதுடன் சமூக அரசியல் பொருளாதார கட்டமைப்புகளுக்கு ஏற்றவாறு செயற்பட்டு வருவதும் போற்றத்தக்கது.

இந்த சனசமூக நிலையம் மேலும் வளர்ச்சி பெற்று அப்பிரதேச மக்களின் வசதிகள் வளம் பெற தொடர்ந்து பணியாற்றுவதற்கு எல்லாம் வல்ல ஆண்டவனின் திருவடி பணிந்து எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எம். சாந்தசீலன்**
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

# இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து ...

**"எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்"**

என்னும் ஔவை மூதாட்டியின் பொன் வாக்கை இலச்சினையாகக் கொண்ட எமது நிலையம் - இன்று ஆலமரம் போல் பல கிளைகளை விட்டு தலை நிமிர்ந்து நிற்பதோடு பொன்விழாவினையும் காண்கின்றது.

கல்வி, கலை, கலாசார பண்பாடுகளையும் சமூக பொருளாதார விழுமியங்களையும் காக்கும் நோக்குடன் இயங்கிவரும் எமது நிலைய வரலாற்றில் முதலாவது இதழ் வெளியீடு 25வது அகவை நிறைவில் 1987இல் வெளிவந்தது. எமது இரண்டாவது வெளியீடாக பொன்விழா சிறப்பிதழ் - நிலையத்தின் வளர்ச்சியையும் எதிர்கால ஒளிக்கீற்றையும் சுட்டி, அதிக பக்கங்களுடன் கனதியான விடயங்களை சுமந்து வெளிவர வேண்டுமென்பது எமது நிலைய மூத்த உறுப்பினர்களினதும் அங்கத்தவர்களினதும் பெருவிருப்பாகும். இவ்விருப்பம் விழாக்குழுவின் தீர்மானமாக உருவெடுக்க இதனை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு. இதழாசிரியர் என்றவகையில் என்னை வந்தடைந்தது. பொன்விழா சிறப்பிதழை கூடிய விடயங்களை உள்ளடக்கி வெளிக்கொணர வேண்டுமென்ற என்னுடைய நீண்டநாள் அவாவினை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பும் கிட்டியது.

இந்தப் பொன்விழா சிறப்பிதழ் நிலைய வரலாற்றுப் பாதையில் பதிவுகளைத் தாங்கி வெளிவர வேண்டுமென்பதே சிறப்பிதழ் ஆர்வலர்களின் ஆரம்ப சிந்தனையாக இருந்தது. இது நியாயமானதும் கூட. நிலைய வரலாற்றின் சில முக்கிய நிகழ்வுகளை இங்கு பதித்துள்ளோம். இந்திய இராணுவ மற்றும் ஸ்ரீலங்கா இராணுவ ஆக்கிரமிப்புக்களின் போது எமது நிலையத்தின் சொத்துக்களோடு ஆவணங்களையும் அழித்தமையால் இப்பதிவுகள் முழுமையானவையாக வில்லை. எனினும் வருங்காலச் சமுதாயம் நிலைய வரலாற்றை எமது மூத்த தலைமுறை யினரின் அனுபவங்களின் நினைவுகளூடாக அறிந்து கொண்டு நிலையத்தை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியுமென நம்புகின்றேன்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்விமான்கள், வைத்திய கலாநிதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றோரின் ஆக்கங்களைத் தாங்கி, காலத்தையும் சூழ்நிலைகளையும் கருத்திற் கொண்டு தகவல்களை உள்ளடக்கி இது வெளிவருகின்றது.

நிலையத்தின் வரலாறு, செயற்பாட்டு அறிக்கை, கவிதைகள், சமூக நிறுவனங்களில் மக்களின் பங்கு, விஞ்ஞானமும் சமூகமும், கல்வியின் சிறப்பு, நாடகக் கலையும் நாமும், ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கு ஆசிரியரினதும் பெற்றோரினதும் பங்களிப்பு, மற்றும் மருத்துவக் கட்டுரைகளான விசர்நாய்க்கடிநோய், ஏற்புவலி, சலரோக நோயாளிகளுக்கான உணவு பற்றிய ஆலோசனை, சூழல் மாசடைதல் அணுகுண்டை விட பெரும் ஆபத்தானது ஆகிய கட்டுரைகளையும் ஆக்கங்களையும் தாங்கி இந்த இதழ் வெளிவருகின்றது.

இம்மலர் வெளியீட்டுக்கான ஆலோசனையையும் ஊக்கத்தையும் தந்த விழாக் குழுவிற்கும், என்னோடு தோளோடு தோள் நின்று உழைத்த மலர்க் குழுவிற்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து வரும் காலங்களிலும் இப்படியான வெளியீடுகள் வெளிவந்து கல்வி, கலை, கலாசார, சமூக, பொருளாதார விழுமியங்களை வெளிக்கொணர வேண்டுமென எனது வாழ்த்துக்களை எனக்குப் பின்னால் வரும் காலடியோசைகளுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**என். பிறேமசீலன்**

**இதழாசிரியர்.**

# உள்ளே உள்ளவை ....


| | பக்கம் |
|---|---|
| ○ கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச் சங்க மத்திய சனசமூக நிலைய தலைவர், செயலாளர், பொருளாளர் விபரம் | 01 |
| ○ 2009-2010ஆம் ஆண்டு மத்திய சனசமூக நிலைய உத்தியோகத்தர்கள் | 02 |
| ○ 2010ஆம் ஆண்டு அமைப்புக்களும், செயற்குழுவும் | 03 |
| ○ மத்திய கிராம முன்னேற்றச்சங்க தலைவரின் சிந்தனையில் ... | 04 |
| ○ மத்திய கிராம முன்னேற்றச்சங்க செயலாளரின் நோக்கில் ... | 05 |
| ○ மத்திய கிராம முன்னேற்றச்சங்க பொருளாளரின் பார்வையில் ... | 06 |
| ○ கடந்து வந்த பாதையில் அழுந்தப்பதிந்த சுவடுகள் | 07-11 |
| ○ மத்தியில் விரிந்தவை (செயற்திட்டம்) | 12-21 |
| ○ முன்னாள் செயலாளரின் உள்ளத்திலிருந்து ... | 22 |
| ○ வாழ்த்துப்பா | 23 |
| ○ சமூக நிறுவனங்களில் மக்களின் பங்கு | 24-25 |
| ○ விஞ்ஞானமும் சமூகமும் | 26-27 |
| ○ கல்வியின் சிறப்பு | 28-30 |
| ○ நாடகக் கலையும் நாமும் | 31 |
| ○ கவிதை | 32 |
| ○ ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கு ஆசிரியரினதும் பெற்றோரினதும் பங்களிப்பு | 33-34 |
| ○ விசர்நாய்க்கடி நோய் + ஏற்புவலி | 35-36 |
| ○ சலரோக நோயாளிகளுக்கான உணவு பற்றிய ஆலோசனை | 37-38 |
| ○ சூழல் மாசடைதல் அணுகுண்டை விட பெரும் ஆபத்தானது | 39-41 |
| ○ மனம் நிறைந்த நன்றிகள் | |




மத்திய கிராம முன்னற்றச் சங்க, மத்திய சனசமூக நிலையத்தின் பழைய தோற்றம்.


மத்திய கிராம முன்னேற்றச் சங்கம்
சனசமூக நிலையம்

# கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச்சங்கம் மத்திய சனசமூக நிலைய 1960 தொடக்கம் 2010 வரையிலான தலைவர், செயலாளர், பொருளாளர் விபரம்

| ஆண்டு | தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| 1960 | மா.நவரத்தினம் | கே.பி.சுந்தரலிங்கம் | ந.இராசையா |
| 1961 | வீ.பொன்னுத்துரை | மா.நவரத்தினம் | நா.சுப்பையா |
| 1961 | மா.நவரத்தினம் | கே.பி.சுந்தரலிங்கம் | மு.தர்மலிங்கம் |
| 1962 | வீ.பொன்னுத்துரை | கே.பி.சுந்தரலிங்கம் | வீ.தர்மலிங்கம் |
| 1963 | மா.சீவரத்தினம் | க.நாகலிங்கம் | ச.இராசையா |
| 1964-1966 | சி.ஐயாத்துரை | கே.பி.சுந்தரலிங்கம் | வ.சின்னராசா |
| 1967-1969 | இ.செல்லையா | கே.பி.சுந்தரலிங்கம் | ச.குலசிங்கம் |
| 1970-1971 | ந.அப்புத்துரை | வ.நவரத்தினம் | ஐ.ஞானசேகரம் |
| 1972 | மு.தர்மலிங்கம் | கே.பி.சுந்தரலிங்கம் | க.கிருஷ்ணன் |
| 1973-1975 | அ.சோமசுந்தரம் | கே.பி.சுந்தரலிங்கம் | பொ.செல்வராஜா |
| 1976 | மா.உதயகுமார் | சு.மகேந்திரம் | த.தேவராஜா |
| 1977-1979 | ச.குலசிங்கம் | கே.பி.சுந்தரலிங்கம் | இ.யோகராஜா |
| 1980-1983 | மா.குணசிங்கம் | த.ஸ்ரீதரன் | சு.மகேந்திரன் |
| 1984 | மா.குணசிங்கம் | அ.பரமானந்தசிவம் | வே.சுந்தரம் |
| 1985 | க.முத்துலிங்கம் | ச.பாலசிங்கம் | வே.சுந்தரம் |
| 1986 | வீ.தம்பிஐயா | சி.ஆனந்தராஜா | ச.பாலசுப்பிரமணியம் |
| 1987-1989 | இ.யோகராசா | சி.ஆனந்தராசா | ச.பாலசுப்பிரமணியம் |
| 1990 | ச.குலசிங்கம் | வே.சுந்தரம் | பொ.கீதராஜன் |
| 1991 | இ.யோகராசா | த.ராதா | பொ.கீதராஜன் |
| 1992 | அ.ஆனந்தராஜா | ஐ.யோகராஜா | பொ.குகேந்திரன் |
| 1992 | த.இரட்ணகுலசிங்கம் | ஐ.யோகராஜா | பொ.குகேந்திரன் |
| 1993 | த.இரட்ணகுலசிங்கம் | ஐ.யோகராஜா | தி.கெங்கேஸ்வரன் |
| 1994 | த.நாகராஜா | சி.ஆனந்தராசா | ச.பாலசுப்பிரமணியம் |
| 1995-1996 | த.இரட்ணகுலசிங்கம் | தி.கெங்கேஸ்வரன் | ஐ.யோகராஜா |
| 1997-1998 | ச.குலசிங்கம் | த.ராதா | த.நாகராசா |
| 1999-2000 | சி.ஆனந்தராசா | தி.கெங்கேஸ்வரன் | த.நாகராசா |
| 2001-2002 | ஐ.யோகராஜா | பொ.குகேந்திரன் | தி.விக்கினேஸ்வரன் |
| 2003 | சி.ஆனந்தராசா | ஐ.யோகராஜா | பொ.குகராஜன் |
| 2004-2006 | சி.ஆனந்தராசா | செ.தயாளன் | ஐ.யோகராஜா |
| 2007-2008 | சி.ஆனந்தராசா | த.இரட்ணகுலசிங்கம் | ஐ.யோகராஜா |
| 2009-2010 | சி.ஆனந்தராசா | தி.விக்கினேஸ்வரன் | இ.ஜெயக்குமார் |

# கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கம், மத்திய சனசமூக நிலையம் நிர்வாக உத்தியோகஸ்தர்கள் விபரம் 2009-2010

| | | |
|---|---|---|
| **தலைவர்** | : | திரு.சி.ஆனந்தராசா |
| **உபதலைவர்** | : | திரு.த.ராதா |
| **செயலாளர்** | : | திரு.தி.விக்கினேஸ்வரன் |
| **உபசெயலாளர்** | : | திரு.த.இரட்ணகுலசிங்கம் |
| **பொருளாளர்** | : | திரு.இ.ஜெயக்குமார் |

**உறுப்பினர்கள்**

திரு.ச.பாலசுப்பிரமணியம்
திரு.க.நடராசா
திரு.த.சுகுணசிங்கம்
திரு.தி.கெங்கேஸ்வரன்
திரு.இ.கதீஸ்வரன்
திரு.செ.விக்கினேஸ்வரன்
செல்வன் க.பாஸ்கரன்
செல்வன் க.பிரசாத்
செல்வன் செ.மதனகுமார்
செல்வன் மு.தீபன்
செல்வன் கு.மயூரன்
செல்வன் க.தவரூபன்

| | | |
|---|---|---|
| **கணக்காய்வாளர்** | : | திரு.மு.குணசீலன் |



2009 - 2010ம் ஆண்டுக்கான நிர்வாகசபை உறுப்பினர்கள்.

அபிவிருத்திச்

# கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம ~~முன்னேற்றச்~~ சங்கம், மத்திய சனசமூக நிலையத்துடன் இணைந்த 2009, 2010ஆம் ஆண்டு அமைப்புக்களும், செயற்குழுவும்

## மத்திய மாதர் அபிவிருத்திச்சங்கம்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திருமதி.இ.உதயகுமாரி |
| செயலாளர் | : | சுகந்தினி |
| பொருளாளர் | : | செல்வி நவரட்ணம் சர்மினி |
| நிர்வாகிகள் | : | திருமதி தெய்வேந்திரம் பத்மினி |
| | | திருமதி கந்தையா சறோஜா |
| | | செல்வி நல்லையா சுமதி |
| | | செல்வி இராசையா நிர்மலா |
| | | செல்வி செல்லத்துரை சரண்ஜா |
| | | செல்வி ஞானசேகரம் யுஜிதா |

## மத்திய விளையாட்டுக் கழகம்

| | | |
|---|---|---|
| செயலாளர் | : | திரு.த.இரட்ணகுலசிங்கம் |
| உறுப்பினர்கள் | : | செல்வன். ஆ.துஸ்யந்தன் |
| | | செல்வன்.க.பிரசாந் |
| | | செல்வன்.ஞா.சந்துரு |

## மத்திய கல்வி மேம்பாட்டுப் பேரவை

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு.சி.ஆனந்தராஜா |
| செயலாளர் | : | செல்வன்.ந.மயூரன் |
| பொருளாளர் | : | செல்வன்.ந.சபேசன் |
| உறுப்பினர்கள் | : | செல்வி.ப.மோகனவதனி |
| | | செல்வன்.நா.யஜித்தன் |

## மத்திய சிறுவர் கழகம்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | செல்வன்.ஆ.கஜலக்சன் |
| உபதலைவர் | : | செல்வன்.ச.ஹரிலக்சன் |
| செயலாளர் | : | செல்வி.இ.பிரியதாரணி |
| உபசெயலாளர் | : | செல்வி.ரா.தமிழினி |
| பொருளாளர் | : | செல்வி.ந.தீபனா |
| நூலகக் காப்பாளர் | : | செல்வி.உ.கஜரூபினி |
| உறுப்பினர்கள் | : | செல்வன்.சு.தனோஜன் |
| | | செல்வன்.க.பகீரதன் |
| | | செல்வி.சி.நித்தியரூபா |

# மத்திய கிராம முன்னேற்றச் சங்க, மத்திய சனசமூக நிலைய தலைவரின் சிந்தனையில் ...



அன்புள்ளம் கொண்ட எமது நிலைய பிரதேச மக்களுக்கு,

காலத்துக்குக் காலம் எமது செயற்பாட்டிற்கு உறுதுணை புரிந்து எம்மை ஊக்கப்படுத்திய உங்களை என்னால் புறம் தள்ளமுடியாது. அதுபோல் அன்றைய செயற்பாட்டினையும் என்னால் மறக்க முடியாது.

ஆண்டுகள் பல கடந்தாலும் அன்றைய கால செயல்கள் பசுமை யாகவே என்னுள் நிழலாடுகின்றன. நான் இப்போ கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச் சங்க, மத்திய சனசமூக நிலைய தலைவராக இருந்தாலும் எமது முன்னோர்களின் வழிகாட்டலே இந்நிலைய வளர்ச்சிக்கு மிகவும் மூலகாரணமாகும்.

இந்நிலையம் இன்று ஆலவிருட்ஷமாக வளர்ந்து இவ்வூர் மக்களுக்கு நிழல் பரப்பிக் கொண்டு இருக்கின்றதென்றால் 50 ஆண்டு காலமாக இந்நிலையத்தைக் கட்டிக் காத்த பெருமை இவ்வூர் மக்களையே சாரும்.

1960 ஆண்டு ஸ்தாபித்த இந்நிலையத்தின் வளர்ச்சியில் பாலர் பாடசாலை, விளையாட்டுக்கழகம், கல்வி மேம்பாட்டுப் பேரவை, மாதர் அபிவிருத்திச் சங்கம், சிறுவர் கழகம் என பரிணாம வளர்ச்சியை கண்டுள்ளது.

பல தலைவர்களின் நெறியாள்கையில் நல்ல பல செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தியதால் காலத்திற்குக் காலம் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களால் பல அழிவுகளைக் கண்டுள்ளது. அப்படியிருந்தும் வெட்ட வெட்ட தழைக்கும் மரம் போல எமது நிலையம் மீண்டும் புத்துயிர் பெற்று வளர்ந்துள்ளது. மேலும் நிலைய செயற்பாட்டினை நீங்கள் எமது மலரில் பதியப்பட்டுள்ள அலகுகளில் இருந்து தெரிந்து கொள்ளலாம். எமது நிலையத்திற்கு புதிய பல தலைமைகள் வருவதுடன் எல்லா உறுப்பினர்களும் நிலைய கோட்பாட்டுக்கு இணங்க செயற்பட வேண்டும். மதிப்புக் கொடுக்க வேண்டும். எங்களை நாங்கள் நாங்கள் மதித்து நடந்தால் மற்றவர்களும் எம்மை மதித்து நடப்பார்கள்.

எம் இனிய உறுப்பினர்களே! எமது நிலைய பிரதேச மக்களே! ஊக்கம் கொடுத்து உதவி புரிந்த நலன் விரும்பிகளே! எம் நிலையம் பொன் விழாக் கொண்டாடும் இனிமையான காலத்தில் கடந்து வந்த பாதையில் எப்படி ஆக்கமும், ஊக்கமும் தந்தீர்களோ அது போல் இனிவரும் காலங்களிலும் ஆதரவு தரவேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

**சி.ஆனந்தராஜா**

தலைவர்

# மத்திய கிராம முன்னேற்றச் சங்க, மத்திய சனசமூக நிலைய செயலாளரின் நோக்கில் ...



கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச் சங்கம், மத்திய சனசமூக நிலையம் தனது எல்லைப் பரப்புக்குள் வாழும் மக்களுக்கு எண்ணிலடங்கா சேவைகள் செய்து பக்திக்கும், மரியாதைக்கும் உரிய உயர்ந்த விழுதுகள் பரப்பி நிற்பது போல் இன்று தனது இணை அமைப்புக்களான பாலர் பாடசாலை, விளையாட்டுக் கழகம், கல்வி மேம்பாட்டுப் பேரவை, மாதர் அபிவிருத்திச் சங்கம், சிறுவர் கழகம் போன்று அமைப்புக்கள் மூலம் பல சேவைகளை செய்துள்ளதை காணக்கூடியதாக இருக்கின்றது. அதாவது இந்த அமைப்புக்கள் மூலமாக அந்தந்தத் துறை சர்ந்த சேவைகளை செய்ய ஒவ்வொரு அமைப்புக்கும் தனித்தனி நிர்வாக கட்டமைப்பையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

அந்தவகையில் விதவைகள் புனர்வாழ்வு, சிறுவர் கல்வி, தீ, மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வன்செயல்கள் இடம்பெற்ற காலங்களிலும் தேவையறிந்து சேவையாற்றியுள்ளது மற்றும் க.பொத, உயர்தரம், சாதாரண தரம் புலமைப் பரிசில் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டு சேவையாற்றியுள்ளது.

இவை எல்லாவற்றிற்கும் எமது சனசமூக நிலைய அங்கத்தவர்களின் சேவை மனப்பாங்கும் நிலையத்தின் மீது அதீத பற்றும் மரியாதையும் வைத்து வயது வித்தியாசமின்றி ஆண், பெண் பேதமின்றிச் செயற்படுவதே ஆகும்.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தால் போல் ஆண்டுகள் தோறும் பாலர் பாடசாலை விளையாட்டு விழா மற்றும் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்மன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு சைவசமய போட்டிப் பரீட்சை ஆகியவற்றை நடத்தி பெறுமதியான பரிசில்களை வழங்குவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நிலையத்தின் மீது அங்கத்தவர்களாகிய நீங்கள் எவ்வளவு கரிசனையுடன் இருக்கின்றீர்களோ அதே போல் நலன் விரும்பிகளும், வர்த்தகப் பெருமக்களும் இருக்கின்றார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இவர்களின் தயவினால் தான் நாம்ஆண்டுவிழாவினையும் வெகுவிமரிசையாகக் கொண்டாட முடிகிறது. ஆகவே நாம் விழாக்களை கொண்டாடினாலும் மக்களை ஆலம் விழுதுகள் போல் தாங்கிக் கொள்ள வேண்டுமென மிக வாஞ்சையும் அலசுகின்றேன்.

தி.விக்கினேஸ்வரன்
செயலாளர்

# மத்திய கிராம முன்னேற்றச்சங்க, மத்திய சனசமூக நிலைய பொருளாளரின் பார்வையில் ...



கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச் சங்கம், மத்திய சனசமூக நிலையம் ஆகியவற்றின் பொருளாளர் என்றவகையில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அந்தவகையில் எமது நிலையமானது பல்வேறுபட்ட சாதனைகளை உள்ளடக்கி ஐந்து தசாப்தத்தை பூர்த்தி செய்து பொன்விழா கொண்டாடுகின்றமை பெருமைக்குரியது. மக்கள் நலனும், சேவை நோக்கமும் தன் இருகண்களாகக் கொண்டு திகழும் எம் நிலையமானது தனது வெற்றிப் பாதையில் சுகமாய் வீசி வரும் தென்றல் போன்ற இந்த மலரானது "பொன்விழா" ஊடு கல்வி, சமுதாயம் மென்மேலும் பயன்பெறும் என்பதை யாவரும் மறுக்க முடியாது.

இவற்றைவிட எமது நிலையம் பல்வேறுபட்ட தரப்பினரின் விமர்சனங்களுக்கும் உள்ளானது. இவ்வாறான சோதனைகளையும் சாதனைகளாக மாற்றும் எம் நிலைய உறுப்பினர்களும் மற்றும் தலைவர் திரு.சி.ஆனந்தராசாவுக்கும் அடியேன் வாழ்த்து என்றென்றும் ..!

மேலும் எமது நிலையம் அறிவை வளர்ப்பதிலும் முன் நிற்கின்றது. எமது ஊர் மாணவர்களிடையே வருடா வருடம் பல்வேறுபட்ட போட்டிகளையும், பொது அறிவுப் பரீட்சையையும் நடத்தி வருகின்றது.

அதிலும் இவ்வருடம் மென்மேலும் சிறப்பாக பொன்விழாவையொட்டிய பல போட்டிகளை நடத்தி வெற்றியீட்டியவர்களை கௌரவித்துள்ளது எனவே எமது நிலையத்தின் அடுத்த வெற்றிப்படியான "பொன்விழா" சிறப்பு மலர் கல்விச் சமூகத்தின் மத்தியில் நல்லதோர் கனிவு கிடைக்கும் என்பது எனது எதிர்பார்ப்பு.

**இரா ஜெயக்குமார்**
**பொருளாளர்**



மத்திய விளையாட்டுக்கழக நிர்வாகிகள்.



மத்திய விளையாட்டுக்கழக உறுப்பினர்கள்.



நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவின் போது....



மத்திய சிறுவர் கழக உறுப்பினர்கள்.



பாலர் பாடசாலை மாணவர்களின் விளையாட்டு நிகழ்வின் போது...



தலைவர் : திருமதி.இ.உதயகுமாரி, செயலாளர் : திருமதி.சுகந்தி, பொருளாளர் : செல்வி.ந.சர்மினி
உறுப்பினர்கள் : செல்வி.ந.சுமதி, செல்வி.ஞா.யுஜிதா, செல்வி.இ.நிர்மலா, திருமதி.க.சறோஜினி, திருமதி.தெ.பத்மினி





2002ஆம் ஆண்டு தைப்பூச நன்னாளில் (22.01.2002) மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தின் புதிய கட்டிட அமைவிடத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவத்தின் போது யாழ் மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் உயர்திரு.கிருஷ்ணசாமி அவர்களால் நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்படுவதையும், முன்னாள் தலைவர் மா.குணசிங்கத்திடமிருந்து தலைவர் ஜ.யோகராசா நன்கொடை பெறுகின்ற காட்சியையும் காணலாம்.

# கடந்து வந்த பாதையில் அழுந்தப் பதிந்த சுவடுகள்

கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் மத்திய சனசமூக நிலையத்தினது 50வது ஆண்டுகால வரலாற்றின் சில முக்கிய நிகழ்வுகளை கடந்தகால ஆவணங்களிலிருந்தும் பெரியோர்களின் தகவல்கள் ஊடாகவும் இயன்றவரை தேர்ந்தெடுத்து தொகுத்து இங்கே பதிவுகளாக்க முயன்றுள்ளோம். இப்பதிவுகள் முழுமையாக இல்லாவிடினும் வருங்கால சமுதாயம் நிலைய வரலாற்றை ஓரளவு அறியவும் தமது மூத்த தலைமுறையின் அனுபவம், ஆற்றல், செயற்பாடுகளை அறியவும் அதனூடாக எதிர்கால திட்டங்களை மேற்கொள்ளவும் இப்பதிவுகள் உதவுமென நம்புகிறோம்.

எமது கிராமத்தின் முன்னேற்றத்திற்கும், பிற பிரதேசங்களிலும், சர்வதேசத்திலும் இடம்பெறுபவற்றை கிராம மக்கள் அறிந்து கொள்ளவும் இவ்வாறான நிலையமொன்று அவசியமென்று உணர்ந்த கோண்டாவில் தில்லையம்பதியைச் சேர்ந்த எமது முன்னோடிகளின் முயற்சியால் எமது நிலையம் 1960ம் ஆண்டில் உருவானது.

1959ம் ஆண்டு இந்நிலையத்தை உருவாக்குவதில் அன்றைய காலகட்டத்தில் போட்டி நிலவியதால் உரிய இடத்தை தெரிவு செய்வதில் தடங்கல் ஏற்பட்டது. இருப்பினும் இந்நிலை யத்தை சிவகாமி அன்னையின் ஆலயத்திற்கு அருகில் அமைக்க அன்றைய பெரியோர்கள் தீர்மானித்தார்கள் அத்தோடு அன்னையவளின் அருளினாலும், அருட்கடாட்சத்தினாலும் கட்டிடத்தினை வெகுவிரைவாக கட்டிமுடிக்க வேண்டிய நிலையிலும் ஆரம்பவேலைகள் 1960ம் ஆண்டு தொடங்கப்பட்டன. தொடக்க ஆண்டின் முதல் தலைவராக மாணிக்கம் நவரத்தினம் அவர்களும், செயலாளராக கே.பி.சுந்தரலிங்கம் அவர்களும், பொருளாளராக ந.இராசையா அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் மூலம் நிலையத்தின் கட்டிட வேலைகள் முன்னெடுக்கப்பட்டன.

இக்கட்டிடத்திற்கான வேலைகள் அனைத்தையும் அன்றைய கட்டிடத்தொழிலாளி திரு.அம்பலவாணர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அடிக்கல் நாட்டு வைபவத்தை திரு.கந்தையா பாலச்சந்திரன் (DRO) அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்று இரவோடு இரவாக பொருட்கள் அனைத்தும் வரவழைக்கப்பட்டு காலை 8 மணிக்குள் அனைத்துப் பொருட்களும் வந்து சேர்ந்த பின்னர் உடனே வேலைகள் ஆரம்பமாகி மாலை 4 மணிக்குள் பத்திரிப்பு வேலைகள் யாவும் நிறைவுக்கு வந்தது. இத்தனைக்கும் எமது கிராமத்து மக்களின் ஒத்துழைப்பே காரணம் எனலாம். அத்துடன் 1962ம் ஆண்டு அன்றைய அரசாங்க அதிபர் திரு.ஜவான் சமரவிக்ரம அவர்களால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் நிதி

ஒதுக்கீடு செய்து புதிய கட்டிடத்தை அமைக்க நிதி வழங்கப்பட்டது.

மீண்டும் இதற்கிடையில் சகிக்க முடியாத சம்பவங்கள் இடம்பெற்றதால் கட்டிட வேலைகள் தொடர்ந்து மேற்கொள்ள அன்றைய அரசாங்கத்தால் தடைவிதிக்கப்பட்டது. இதற்கிடையில் அன்றைய பெரியோர்களின் முயற்சியின் பலனாக வாக்கெடுப்பின் மூலம் உரிய இடத்தை தெரிவு செய்யும் படி, உரிய தரப்பினரிடம் தெரியப்படுத்தப்பட்டது. அதற்கமைய 324 பேரைக் கொண்ட பொதுச்சபை யாழ்/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலை மண்டபத்தில் ஒன்று கூடி, காரியாதிகாரி திரு.செ.சிவஞானம் அவர்கள் தலைமையில் வாக்கெடுப்பு நடைபெற்றது. இதன் முடிவின் பிரகாரம் 225 பேர் நிலையக் கட்டிடத்தை தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்மன் ஆலயத்துக்கு அருகில் அமைக்க ஆதரவாகவும், எதிர்த்து 99பேரும் வாக்களித்தனர். இதன் மூலம் நாம் ஒரு சிறப்பான நிலையத்தை அமைப்பதற்கு உதவியது. இதனைத் தொடர்ந்து கட்டிட வேலைகள் மும்முரமாக நடைபெற்று, அனைத்து வேலைகளும் முடிவுற்றதும் 1965.07.15 அன்று திரு.செல்லையா சிவஞானம் (D.R.O) அவர்களால் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன் நின்றுவிடாது பல திட்டங்களையும் நடைமுறைக்கு கொண்டு வந்தனர். படித்த யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்குடன் 1972ம் ஆண்டு கனேடிய அரசின் உதவியோடு நெசவு நிலையம் ஒன்று அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நெசவு நிலையத்தை அமைப்பதற்கு இடம் இல்லாத காரணத்தால் மாதன் கந்தவனம் என்பவரின் காணியை 3250 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. அன்றையகால கட்டத்தில் மாதன் கந்தவனம் குடியிருக்க இடம் இல்லாத காரணத்தால் சங்க உறுப்பினரான கணபதி நாகலிங்கம் அவர்கள் மனமுவந்து அவரை தனது வீட்டில் குடியிருத்தி விட்டு அவர் தன்மனைவியின் ஊரான ஓட்டுமடம் சென்று குடியமர்ந்தார். நெசவுசாலை வேலைகள் யாவும் பூர்த்தியடைந்து 10.04.1968ம் ஆண்டு அரச அதிபர் திரு.வேர்ணன் அபயசேகரா அவர்களினால் கோலாகல மாக திறந்து வைக்கப்பட்டது.

இவ்வாறு கிராம முன்னேற்றச் சங்கமானது தனது சமூகப் பணியினை திறம்பட ஆற்றி வந்தது. தொடர்ச்சியான இப்பணியிலே கிராம மக்களின் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் போன்ற துறைகளில் மக்கள் முன்னேற வழிகாட்டியது. இதில் ஓரளவு வெற்றியும் கண்டது. தொடர்ந்து சங்கம் தனது வளர்ச்சியின் இலக்கை எட்டி ஒரு தசாப்த காலத்தைப் பூர்த்தி செய்து 17.01.1978ல் 18ஆவது ஆண்டு நிறைவு விழாவினையும் மிகச் சிறப்பாக நடத்தி முடித்தது. மேலும் மத்திய கிராம முன்னேற்றச் சங்கமும், ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலையமும் இணைந்து மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தில் "பொதுப்பணி மன்றம்" ஒன்றை 12.10.1982ல் உருக்கியது. இவ் அமைப்பானது காலப்போக்கில் தனது செயற்பாடுகளை நிறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இக்கிராமத்தின் குடிநீர் பிரச்சினையை தீர்க்கும் முகமாக தண்ணீர் தாங்கி ஒன்றினை அமைக்கும் நோக்குடன் வேலைகள் 1981ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. இதற்கான நிதியினை அரசாங்க அதிபர் தேவநேசன் நேசையா அவர்களினால் 22000 ரூபா நிதி வழங்கப்பட்டது மேலும் நிதி போதாமையினால் அடுத்து பதவிக்கு வந்த அரசாங்க அதிபர் வீ.எம்.பஞ்சலிங்கம் அவர்களிடம் மேலதிக நிதி கேட்டுக் கொண்டதற்கிணங்க நிதி வழங்கப்பட்டு பொதுமக்களின் உதவியுடனும், வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு தொடர்ந்து இத்தண்ணீர் தாங்கியினை 28.01.1983ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் திரு.மு.சிவசிதம்பரம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இதனால் எமது கிராமத்து மக்கள் உச்ச பயனைப் பெற்றனர். இதற்கு முன்னர் இருந்த குடிநீர் பிரச்சினையை தீர்க்கும் முகமாக 1960ம் ஆண்டு இரண்டு பொதுக் கிணறுகள் அமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கவையாகும்.

1986ம் ஆண்டு காலப்பகுதியில் சிவில் நிர்வாகம் சீராக இயங்காத காரணத்தால் எமது கிராம மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு "சமாதானசபை" என்ற ஒரு அமைப்பும் 30.03.1986 அன்று உருவாக்கப்பட்டது. இச்சபை தனது பணியை திறம்பட ஆற்றி வந்தது. இக்கால கட்டத்திலேயே இறைஞர்களிடையே விளையாட்டு திறனை ஊக்குவிக்கும் முகமாக "மத்திய கிராம முன்னேற்றச் சங்க விளையாட்டுக் கழகம்" உருவாக்கப்பட்டு இளைஞர் களிடையே நல்ல வரவை ஏற்படுத்திக் கொண்டது.

மேலும் 1987ம் ஆண்டு நாட்டில் இடம்பெற்ற வன்செயல் காரணமாக இடம்பெயர்ந்து நல்லூர் ஆலயத்தில் தஞ்சமடைந்த எமது பகுதி மக்களுக்கு தொண்டு நிறுவனங்களின் மூலம் உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது. இதற்கு அன்றைய நிர்வாக சபையினர் பெரும் சிரமத்தின் மத்தியில் செலாற்றி தங்களாலான உதவிகளைப் புரிந்தனர். இவ்வாறு இச்சங்கமானது தனது சமூகப் பணியினை மேற்கொண்டு வந்தது.

இச்சங்கத்தின் வளர்ச்சியின் அடுத்தபடியாக 25வது ஆண்டு நிறைவு "வெள்ளிவிழா" 12.02.1987ம் ஆண்டு அன்றைய தலைவர் வீ.தம்பிஜயா அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அன்றைய தினம் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் து.வித்தி யானந்தன், தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கிராமசேவை அலுவலர் ச.கனகலிங்கம் ஆகியோரின் ஆசியுரை, வாழ்த்துரைகளுடனும், ஊர்த்தொண்டன் கதிரவேலு பாலசிங்கம் அவர்கள் கிராமத்திற்கும், நாட்டிற்கும் ஆற்றிய சேவைகளையும் தாங்கி இன்னும் பல ஆக்கங்களுடன்"வெள்ளிவிழா "சிறப்பு மலர்" வெளியிடப்பட்டது. இச்சிறப்பு மலர் வெளியீட்டுக்கு அன்றைய செயலாளரும், இன்றைய பொன்விழா ஆண்டின் தலைவருமான

சி.ஆனந்தராஜா அவர்களின் பங்கு அளப்பரியது.

1987-1989ம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலை காரணமாக சீர்குலைந்திருந்த கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் போன்ற இன்னோரன்ன தேவைகளை தொண்டு நிறுவனங்களின் மூலம் எமது சங்கம் இயன்றவரை செயலாற்றி வந்தது.

1995ம் ஆண்டு குடாநாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்து தென்மராட்சி பகுதியில் தஞ்சமடைந்தனர் அக்காலப்பகுதியில் தஞ்சமடைந்த எமது பகுதி மக்களுக்கு கிராம முன்னேற்றச் சங்கமானது அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் தன்னாலான சேவையினை ஆற்றி வந்தது. மீண்டும் 1996ம் ஆண்டு மக்கள் அனைவரும் தங்களது சொந்த இடங்களுக்கு மீண்டனர். அக்காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களை இனங்கண்டு அவர்களுக்குரிய உதவிகளையும் புரிந்தது.

கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கோடு 2002ம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கும் புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் கௌரவித்து பதக்கங்கள் வழங்கப்பட்டன.

வீ.தம்பிஐயா ஞாபகார்த்தமாக முத்தொளி வீடியோ ஸ்தாபனத்தாரும், பொ.புலவர் ஞாபகார்த்தமாக புலவர் வீடியோ ஸ்தாபனத்தாரும் அனுசரனை வழங்கியிருந்தனர். மாணவர்களின் கணனி தேவை கருதி நாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க கந்தவனம் நாகேந்திரன் (இந்திரன் -டென்மார்க்) கணனியை அன்பளிப்பு செய்துள்ளார்.

இதையடுத்து 2002ம் ஆண்டு ஸ்ரீசிவகாமி அம்பாள் ஆலய தேவைகளுக்காக முன்பு இருந்த நிலைய கட்டிடத்தை அகற்ற வேண்டிய சூழ்நிலை உருவானது. இதனை கருத்தில் கொண்டு எமது கிராமத்து மக்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலர், அரச அதிபர் ஆகியோரின் ஆலோசனைப்படி பொதுக்கூட்டம் ஒன்று 31.02.2002 இல் நடைபெற்றது. அதில் நிலைய கட்டிடத்தை வேறுகாணியில் அமைப்பதற்கு அனுமதி பெறப்பட்டது. கட்டிடத்தை அமைப்பதற்காக வ.ஐயாத்துரை அவர்களிடம் 475000 ரூபாவுக்கு ¾ பரப்பு காணி கொள்முதல் செய்யப்பட்டு அதில் புதிய கட்டிடத்தை கட்டுவதற்காக தீர்மானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் 2002-03 பங்குனி உத்தர தினத்தன்று தலைவர் ஐ.யோகராசா தலைமையில் உள்ளூராட்சி ஆணையாளர் ரி.வி.கிருஸ்ணசாமி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு இரண்டு மாடிகளை கொண்ட கட்டிடத்தை விரைவாக கட்டிமுடிப்பதற்கு எமது இளைஞர்களும், பெரியோர்களினதும் அயராத முயற்சியினால் கட்டிடம் விரைவாக கட்டி எழுப்பப்பட்டது. அக்காலத்துக்குரிய நிர்வாக சபையினருடைய பதவிக்காலம் முடிவுற்றதும் புதிய நிர்வாக சபை சி.ஆனந்தராஜா தலைமையில் பதவியேற்றுக் கொண்டது. கட்டிட வேலைகளும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இக்காலப்பகுதியில் கல்வி வளர்ச்சியை மேலும் மேம்படுத்தும் நோக்குடன் "கல்வி மேம்பாட்டு பேரவை" எனும் அமைப்பு சி.ஆனந்தராசா தலைமையில் உருவாக்கப்பட்டது. இவ் அங்குரார்ப்பண வைபவத்தன்று பெருமளவு நிதியும், வரவேற்பும் கிடைத்தது. இவ் அமைப்பானது தன் பணியை திறம்பட ஆற்றி வந்தது. இது தன் முதல் கண்ட பணியில் நந்தகுமார் மயூரன் என்ற மாணவன் பல்கலைக்கழகத்துக்கு தெரிவானர். இது இவ்வாறு நடந்தேற புதிய கட்டிட வேலைகள் யாவும் பொதுமக்களின் அயராத உழைப்பினாலும் முயற்சி யினாலும் புதிய கட்டிடம் கட்டியெழுப்பப்பட்டது. இதனது திறப்புவிழா 22.01.2008 ஆண்டு தலைவர் சி.ஆனந்தராஜா அவர்களால் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. நிலைய கட்டிடத்தை கட்டிமுடிப்பதில் தலைவர் அவர்களின் தலைமையிலான நிர்வாகத்தின் அயராத முயற்சியும் பொதுமக்களின் ஒத்துழைப்பும் முக்கியமானது எனலாம்.

தொடர்ந்து இளைஞர் யுவதிகளின் நன்மை கருதி இவர்களுக்கான தையல் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இதற்காக மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் மூலம் பயிற்சி வழங்கப்பட்டது. தொடர்ந்து இளைஞர்களுக்கான மின்இணைப்பு பயிற்சி வழங்கப்பட்டது. கல்வி மேம்பாட்டு பேரவை தனது வளர்ச்சியின் அடுத்த கட்டத்தில் நந்தகுமார் சபேசன் என்ற மாணவன் கணித பாடத்தில் சித்தி (3A) யாழ் மாவட்டத்தில் 17வது நிலையினை பெற்று அடைந்து மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல்துறைக்கு தெரிவாகியமை எமது கிராமத்துக்கு கிடைத்த வரப்பிரசாதம் ஆகும். இவ்வாறான பணிகளுடன் நின்று விடாது அன்று தொட்டு இன்று வரை இந் நிலையமும், இதனோடு இணைந்த அமைப்புகளும் மக்களுக்கு தன்னாலான சேவையினை திறம்பட ஆற்றியே வந்தது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு சிறு கட்டிடத்தில் மிகக் குறைந்த வசதிகளுடன் எம்முன்னோர் விதைத்த கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச் சங்கம், மத்திய சனசமூக நிலையம் என்ற சிறுவிதை காலக்கிராமத்தில் பரந்து பாலர்பாடசாலை, விளையாட்டுக் கழகம், மாதர் அபிவிருத்திச் சங்கம், கல்வி மேம்பாட்டுப் பேரவை, சிறுவர் கழகம் எனப்பல கிளைகள் விட்டு இன்று எமது கிராமத்தவர்களின் பொருளாதார விருத்திக்கு உதவும் மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் "நலநோம்பு மூலவள நிலையம்" என்ற பெருவிருட்சமாக வளர்ந்தது. இந்த ஐந்து தசாப்தங்களிலும் எமது பணிகள் சிறக்க ஆலோசனைகளும், அறிவுரைகளும் வழங்கிய அனைத்து மக்கள் மற்றும் நிலைய அங்கத்தவர்களின் ஆதரவு தொடர்ந்தும் எமக்குக் கிட்டுமென்ற நம்பிக்கையும் உடையவர்களாயுள்ளோம்.

நன்றி

ஆக்கம் : சி.ஆனந்தராசா
தலைவர்

ஆக்க உதவி : மூத்த உறுப்பினர்களான
திரு.கே.பி.சுந்தரலிங்கம்,
திரு.க.வேலுப்பிள்ளை

# மத்தியில் விரிந்தவை

*மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் தனது வளர்ச்சிப் படிகளில்*
*மக்களுக்கு ஆற்றிய சேவைகள்*

1960ஆம் ஆண்டு தை மாதம் 9ஆம் திகதி ஆரம்பமான இந்த மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் தான் நடந்துவந்த பாதையை திரும்பிப் பார்க்கிறது.

ஐம்பது ஆண்டுகள் தனது பணியை மக்களுக்கு வெகு சிறப்பாக செய்துள்ளது. இவ்வேளையில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தை உருவாக்க மூலகாரணமாக இருந்த இவ்வூர் பெரியார்களை எண்ணிப்பார்க்க வேண்டும். இவர்களின் அயராத உழைப்பினாலும், தன்னம்பிக்கை விடாமுயற்சி போன்றவற்றாலேயே இவ்வளவு தூரம் வளர்ந்துவந்து மக்களுக்கு சேவை புரிந்தது எனலாம். மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் அன்று தொடக்கம் இன்று வரை மக்களுக்கு ஆற்றிய பணிகளில் சிலவற்றை விவரிக்கின்றோம்.

- 15.05.1960இல் மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் தனது பணியில் முதன் முதலாக, எமது கிராமத்துக்கு பொது மருத்துவமனை ஒன்று தேவை எனவும் அதற்கு மருத்துவமாது ஒருவரை நியமித்து எமது கிராமத்து மக்களுக்கு சேவை புரியவேண்டுமெனவும் இலங்கை அரசுக்கு மகஜர் மூலம் வேண்டுகோள் விடுத்தது. இது பின்னர் அரசினால் நடைமுறைப் படுத்தப்பட்டது.

- குடிநீர் தேவையை ஓரளவு பூர்த்தி செய்யும் நோக்குடன் பொதுமக்கள் பாவனைக்காக 23.01.1961இல் இரு கிணறுகளை அமைத்து அவர்கள் தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்தது.

- கிராமத்து சிறுவர்களிடையே இளம்பிள்ளை வாதநோய் பரவாது இதனை தடுப்பதற்கு இலங்கை அரசின் பொது சுகாதாரஸ்தாபனத்துடன் தொடர்புகொண்டு அதற்கான தடுப்பு இயக்கத்தை 28.02.1962இல் ஆரம்பித்து நோய்த்தடுப்பு வேலைகளில் ஈடுபட்டது.

- மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்திற்கு நிலையான கட்டிடம் ஒன்றை அமைப்பதற்காக இலங்கை அரசின் பன்முகப்படுத்தப்பட்ட வரசு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென மகஜர் மூலம் வேண்டியது.

இவ்விடயத்தை கவனிக்க யாழ்ப்பாண அரசாங்க அதிபர் (1963ஆம் ஆண்டு) உயர்திரு ஜவன் சமரவிக்கிரம தலைமையிலான ஒரு குழுவும் ஆரம்பிக்கப்பட்டது.

- இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 23.11.1968இல் உதவி வழங்கியது.

- 23.11.1963இல் மரணமான அமெரிக்க ஜனாதிபதி கெனடிக்கு அன்றைய தினம் அனுதாபச் செய்தி அனுப்பப்பட்டது.

- சத்துணவு அற்ற சிறார்களுக்கு சத்துணவு வழங்கும் நோக்குடன் பால்நிலையம் ஒன்றை 5.07.1965இல் ஆரம்பித்து, இலவசமாக பால் விநியோகம் செய்யப்பட்டது.

- 01.12.1955இல் சிரமதான இயக்கம் ஆரம்பித்து, இதன் மூலமாக கிராம மக்களுக்கு வேண்டிய பொதுத் தேவைகளை சிரமதான முறையில் மேற்கொண்டனர்.

- படித்த யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்குடன் 10.04.1986இல் "கைத்தறி நூல் நிலையம்" ஒன்று ஆரம்பிக்கப்பட்டு யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது.

- கிராம மக்களின் விளையாட்டுத்துறையை பண்படுத்தவும் உள்ளூர் போட்டியாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும் 24.12.1970இல் விளையாட்டுத்துறை அமைச்சினது உதவியோடு, விளையாட்டுப்பொருட்கள் பலவற்றை பெற்றுக் கொடுத்தது.

- கோண்டாவில் வாழ் மக்களுக்காக சேவை புரிந்த கிராம சேவகர் திரு.தளையசிங்கம் அவர்களுக்கு சேவைநலன் பாராட்டுவிழா 07.01.1973இல் நடைபெற்றது.

- 31.03.1973இல் கோண்டாவில் வடக்குப் பகுதிக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்க முயற்சியால் மின்னிணைப்பு வழங்கப்பட்டது.

- கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் போன்ற நடவடிக்கைகளை மேம்படுத்த யாழ் லயன்ஸ் கழக உதவியோடு 09.03.1979இல் சிரமதான இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்தியது.

- கிராம மக்களின் வசதிக்காக நல்லூர் பல.கூ.சங்க கிளை நிறுவனத்தை தனது பகுதியில் 08.06.1974 இல் நிறுவியது.

- கலை ஆர்வம் உடையவர்களை ஒன்றுதிரட்டி "அண்ணாகலையகம்" என்ற நாடக மன்றத்தை 08.09.1976இல் ஆரம்பித்தது.

- கிராமத்துச் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக 03.02.1977 இல் பாலர் பாடசாலையை ஆரம்பித்தது.

- பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு மாலை நேரத்தில் இலவசப் போதனை வழங்க மாலை நேரப் பாடசாலையை 12.12.1977இல் ஆரம்பித்து மாணாவர்களுக்கு கல்வியூட்டியது.

- 17.01.1978இல் மத்திய கிராம முன்னேற்றச் சங்க 18ஆவது ஆண்டு விழா மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

- தென்னிந்திய பிரபல பக்திப்பாடகி கே.பி.சுந்தராம்பாள் 24.09.1978 இல் மரணமானதால் அவரது குடும்பத்திற்கு அனுதாபச் செய்தி அனுப்பப்பட்டது.

- மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தின் இந்து சமய கலாச்சார பிரிவு அகில இலங்கை இந்துசமய கலாசார பிரிவில் 18.12.1980 இல் பதிவு செய்யப்பட்டது.

- பாலர் பாடசாலையின் ஆண்டுவிழா 20.01.1981இல் கொண்டாடப்பட்டது.

- குடிநீர் வசதியை மேலும் விரிவுபடுத்துவதற்காக ரூபா 22,000 செலவில் 20.01.1981இல் தண்ணீர் தாங்கி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

- மத்திய கிராம முன்னேற்றச் சங்கமும் ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையமும் சேர்ந்து மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தில் "பொதுப்பணிமன்றம்" எனும் அமைப்பு 12.10.1982 இல் உருவாக்கப்பட்டது.

- 20.01.1981இல் ஆரம்பிக்கப்பட்ட தண்ணீர்தாங்கி திறப்புவிழா 28.01.1983இல் நடைபெற்றது. பிரதம விருந்தினராக நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு.மு.சிவசிதம்பரம் அவர்கள் கலந்துகொண்டார்.

- குடியிருப்பு வசதியற்ற 20 வறிய குடும்பங்களுக்கு 12.04.1985இல் 10 பரப்பு காணி வழங்கி அதில் 20 குடியிருப்புக்களை ஏற்படுத்தி கொடுத்தது.

- மலசலகூட வசதியற்ற மக்களுக்கு மலசலகூடம் அமைக்கும் பணி 22.08.1985 இல் ஆரம்பமானது.

- மத்திய கிராம முன்னேற்றச் சங்க பாலர் பாடசாலைக்கு மில்க்வைற் தொழிலதிபர் க.கனகராஜா அவர்கள் 29.05.1986இல் 15000/- பெறுமதியான தளபாடங்களை அன்பளிப்புச் செய்தார்.

- 14.07.1986இல் வசாவிளானில் ஏற்பட்ட இராணுவ கெடுபிடிகளால் அகதிகளாக, மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தில் தஞ்சம் அடைந்தோருக்கு ஆதரவு வழங்கி பாதுகாத்து வந்தது.

- எமது கிராமத்து எழுத்தாளரான மாத்தளை ஆ.இராசலிங்கம் எழுதிய "புதுயுக நாயகிகள்" என்னும் நூல் வெளியீட்டு விழாவை 31.08.1985 இல் நடத்தியது.

- 27.10.1989 இல் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் மூலமாக வழங்கப்பட்ட ரூபா 15000 பெறுமதியான மூன்று வீடுகளை பொறுப்பேற்று வசதியற்றோருக்கு சிரமதான முறையில் செய்து கொடுக்கப்பட்டது. கிராம மக்களுக்கு உதவிகளை மேற்கொள்ள சிரமதான பணிகளை செய்வதற்காகவும் 27.10.1986இல் யாழ் றோட்டறிக் கழகத்துடன் இணைந்து மத்திய கிராம முன்னேற்றச் சங்க றோட்டறிக் கிராமக் குழு என்னும் குழுவை அமைத்தது.

- மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் கிராமக்குழு மூலம் கிராம மக்களுக்கு ஆற்றிய பணிகள்
- 29.10.1986இல் சிரமதானம் மூலமாக குழாய்க்கிணறு தோண்டியது.
- மலசலகூட வசதியற்றவர்களுக்கு 10 மலசலகூடங்களை 01.11.1986 இல் அமைத்துக் கொடுத்தது.
- மத்திய கிராம முன்னேற்றச் சங்க.நூலகப் பிரிவுக்கு ஆயிரக்கணக்கான நூல்களும் இதனை பாதுகாக்க ஒரு அலுமாரியும் 02.11.1986இல் யாழ் றோட்டறிக்கழகத்தால்அன்பளிப்பு செய்யப்பட்டது.
- மாலைநேர பாடப்போதனைக்கு ஆசிரியை ஒருவரை நியமித்து மாலை நேர பாடப் போதனையை நடத்தி வந்தது.
- 28.11.1986 இல் மரம் நாட்டுவிழா நடைபெற்றது. அன்றையதினம் மில்க்வைற் உதவியோடு ஆயிரக்கணக்கான மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.
- மீன்சந்தை, புதிய வீதி என்பன 20.12.1989 இல் திறந்து வைக்கப்பட்டன.
- 28.01.1987 இல் இரு கால்களும் ஊனம் அடைந்த ந .செல்வராஜா என்பவருக்கு முச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.
- யாழ் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலையில் சிரமதானம் மூலம் 23.01.1987 இல் தென்னை, மா, வேம்பு போன்ற மரக்கன்றுகள் நாட்டியது.

## செயல்திட்ட ஒழுங்குகள்

- காணிவசதியற்ற 18 பேருக்கு குடியிருப்பு வசதி செய்து கொடுக்கப்பட்டது 23.03.86 ல் பாலசிங்கம் வீதி என்னும் புதிய வீதி ஒன்றை சிரமதான பணி மூலமாக செய்தது
- 26.03.86ல் சிவகாமி அம்மன் ஆலய பின்வீதி திருத்தி அமைத்துக் கொடுக்கப்பட்டது.
- 30.03.86ல் "சமாதான சபை" அமைக்கப்பட்டது.
- 03.04.86ல் கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கான ஒற்றுமை என்ற அடிப்படையில் கருத்தரங்கு நடைபெற்றது.
- 09.04.86ல் மதுபான விற்பனைக்கான தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது.
- 13.04.86ல் வயிரமுத்து பரமலிங்கத்தினால் அன்பளிப்பு செய்யப்பட்ட மணிக்கூடு ஒன்று பாடசாலையில் வைக்கப்பட்டது.
- 26.05.86ல் எமது பாலர்பாடசாலைக்கு ரூபா 5000/- பெறுமதியான பத்துச்சோடி சிறுவர் மேசைகளை மில்க்வைற் தொழிலதிபர் க.கனகராஜா அவர்கள் அன்பளிப்பு செய்தார்.
- 28.05.86ல் பொது இளைஞர்களினால் கிராம முன்னேற்றச் சங்கத்தின் பாவனைக்காக ஒரு மணிக்கூடு அன்பளிப்பு செய்யப்பட்டது.
- 24.06.86ல் சர்வோதயா ஸ்தாபனத்தினர் மூலமாக எமது பாலர்பாடசாலைக்கு மேலதிகமாக இரு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். அத்தோடு சிறுவர்களுக்கு சத்துணவு வழங்கும் நோக்குடன் அன்றைய தினமே சத்துணவுத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது.
- 10.07.86ல் யாழ் றோட்டறிக்கழகத்தின் மூலமாக மாலை நேரத்தில் வகுப்புக்களை நடத்து வதற்காக 300 ரூபா சம்பளத்தில் ஒரு அசிரியரை நியமித்து பாடபோதனை வழங்கப்பட்டது.
- 12.10.86ல் எமது மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் யாழ் றோட்டறிக் கழகத்தின் உதவியோடு நூலக பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அத்தோடு நூலகத்திற்கு தேவையான நூல்களும் கழகத்தால் வழங்கப்பட்டது.
- 27.10.86ல் கிராமவளர்ச்சியின் கருத்திற் கொண்டு யாழ் றோட்டறிகழக உதவியோடு புதிய றொட்டறி கிராமக்குழு ஒன்று எமது சங்கத்தின் மேற்பார்வையின் கீழ் அமைக்கப்பட்டது.
- 12.11.86ல் யாழ் றோட்டறிக்கழக உதவியோடு சிரங்கு நோய்க்கு B.B. கிறீம் மருந்து பூசப்பட்டது.
- 23.12.86 ம.கி.மு.ச புதிய மீன்சந்தை ஒன்று அமைக்கப்பட்டது.
- 28.12.86ல் மில்க்வைற் அதிபர் க.கனகராஜா அவர்களின் அனுசரணையுடன் மரம் நாட்டுவிழா நடத்தப்பட்டது.
- 05.01.87ல் யாழ் றோட்டறிக் கழக உதவியோடு நடேசு செல்வராஜாவுக்கு எமது ம.கி.மு சங்கம் முச்சக்கரவண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.
- 12.02.87ல் ம.கி.மு.ச 25 வருட பூர்த்தியின் வெள்ளி விழாக் கொண்டாடப்பட்டது.
- 15.03.87ல் சுகாதாரக் கருத்தரங்கு நடைபெற்றது.
- இருள் சூழ்ந்து கிடந்த எமது பகுதியைச் சேர்ந்த மிக முக்கியமான வீதிகளுக்கு மின்

இணைப்புச் செய்து மின்குமிழ்கள் அமைத்து சுமார் 7000/- ரூபா செலவு செய்து மின்சாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

- 10.10.1987 இல் எமது பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது நல்லூர் அகதிமுகாமிற்கு இடம்பெயர்ந்த கோண்டாவில் வடக்கு வாழ்மக்கள் அனைவருக்கும் எமது கிராம சேவையாளர் திரு.எஸ்.கனகலிங்கம் அவர்களின் உதவியோடு உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டது.
- 8.12.1987இல் நடைபெற்ற எமது பகுதி இராணுவ நடவடிக்கையின் போது தீக்கிரையாக்கப்பட்ட சுமார் 17வீடுகளுக்கும் அதனை புனரமைப்பு செய்வதற்காக T.R.R.O ஸ்தாபனத்தின் உதவியோடு அதனை திருத்தி அமைத்து மக்களை மீண்டும், குடியமர்த்திய தோடு அன்றைய தினம் உயிர்ச்சேதம் ஏற்பட்ட இரு குடும்பத்தினருக்கு (திரு.நாகலிங்கம், சிறீதரன், கதிரவேலு அருளம்பலம்) ஆறுதலும் அனுதாபமும் உதவியும் புரிந்தது.
- 12.01.1988 போசாக்கில் குறைந்த பிள்ளைகளுக்கு எவ்.ஆர்,எஸ், எஸ் உதவியோடு ஒரு போசாக்கு நிலயைமொன்றை அமைத்து அதில் சத்துணவு வழங்கியதோடு எமது கிராமப்பகுதி யுவதிகளுக்கு வேலைவாய்ப்பும் அமைத்துக் கொடுக்கப்பட்டது.
- 15.02.1988இல் மிகவும் வேகமாக பரவிவந்த சொறி, சிரங்கு போன்ற தொற்று நோய்களுக்கு வைத்தியர்களை வரவழைத்து அவர்களின் பரிசோதனையின் பின்பு மருந்து வழங்கப்பட்டது.
- 10.03.1988இல் அரசாங்க பாடசாலைகள் சீர்குலைந்த இந்தக் காலக்கட்டத்தில் மாணவர்கள் தொடர்ந்து கல்வியில் ஈடுபட வேண்டுமென்ற நோக்குடன் படித்த இளைஞர்களையும் யுவதிகளையும் ஆசிரியராக நியமித்து சுமார் 4 மணிநேர, 2ம் வகுப்பு - தொடக்கம் 10ம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கு கல்வி வசதி செய்து கொடுக்கப்பட்டது.
- 12.03.1988இல் முன்பு தொடர்ச்சியாக நடைபெற்று வந்த எமது சங்கத்தின் கீழ் இயங்கிவந்த சமாதானசபையை இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த சபையை மீண்டும் 11 பேர் கொண்ட உறுப்பினர்களை தெரிவுசெய்து சீர்குலைந்த மக்களையும், ஏற்படும் பிரச்சனைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் பலபுரிந்து, அவர்களை சமாதானப்படுத்தி, ஐக்கியப்படச் செய்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
- 15.08.1988இல் சர்வோதயா ஆதரவில் நடத்தப்பட்ட கிராமமுன்னேற்றச் சங்கங்களுக்கான விளையாட்டுப்போட்டியில் எமது பாலர்பாடசாலையையும் பங்குபற்றவைத்து 287 புள்ளிகளையும் பெற்று முதலாம் இடத்தையும் கணித்து அதற்கான கேடையத்தையும் பெற்றுக் கொண்டது.
- 14.09.88இல் பாலர்கல்விக்கழகத்தின் ஆதரவில் நடத்தப்பட்ட யாழ் மாவட்ட பாடசாலை களின் பேச்சுப் போட்டிகளில் எமது பாடசாலையையும் பங்குபெறச் செய்து முதலாம் இடத்தையும் பெற்றது.
- வீடமைப்பு அதிகாரசபையினால் நடத்தப்பட்ட குறைந்த செலவில் வீடமைத்தல் போன்ற

விடயத்தில் எமது பகுதி மக்களையும் பங்குபெறச் செய்து மாவட்ட ரீதியிலும், கிராம மட்டத்திலும் பரிசில்கள் பெறச் செய்தன.

- 1.10.1988 எமது பகுதியின் கிராமமுன்னேற்றச் சங்கங்களுக்கிடையிலான ஒற்றுமையைப் பலத்தும் முகமாக உரும்பிராய் மேற்கு அன்னுங்கை இளைஞர். ச.சமூக நிலையமும், கலைவாணி, ச.சமூக நிலையம் போன்ற நிலையங்களுடன் சேர்ந்து ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் பலப்படுத்தியது.
- 06.10.1988இல் இளைஞர் சனசமூகத்தினரால் அமைந்த பாலர்பாடசாலை திறப்பு விழாவுக்கு எமது சங்கத்தின் ஞாபகார்த்தமாகவும் சங்கங்களுக்கான ஒற்றுமையையும் பலப்படுத்தும் முகமாக ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற கருத்துக்களையும் முன்வைத்து நன்றி உரை களும், வாழ்த்துரைகளும் வழங்கப்பட மறைந்த தமிழகமுதல்வர் திரு.எம்.ஜி.ராமச் சந்திரனின் உருவப்படமும் வழங்கப்பட்டன.
- எம்மால் குடியேற்றப்பட்ட 20 குடும்பங்களுக்கு ஐக்கியநாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் உதவியுடன் முதற்கட்டமாக இருவீடுகளுக்கு ஐ.நா.சபையின் அகதிகளுக்கான உயர்தஸ்ானிகர் குழுவின் திட்ட ஆலோசகர் திரு.சுனில்தராப்பா அவர்கள் அடிக்கல் நாட்டி வைத்தார்.

**1994ம் ஆண்டின் எமது நிர்வாக சபையினரால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள்**

- வறிய மாணவரின் கல்விக்காக மாலை நேரவகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டது.
- இரவுநேர வகுப்புக்களுக்காக அகதிகள் புனர்வாழ்வு நிதியம் ஊடாக பெற்றோல்மாக்ஸ் பெறப்பட்டமை
- காரைக்கால் மயானத்தை திருத்தியமைத்து இரும்புகேடர் அமைத்து கொடுக்கப்பட்டது.
- நெடுஞ்சாலைகள் திணைக்களத்தின் உதவியோடு இன்சூர் வீதி புனரமைப்பு செய்யப்பட்டது.
- பாலர் பாடசாலை மாணவர்களுக்கு பிரதேச சபை செயலர் உதவியுடன் (நான்கு சோடி) தளபாடம் அமைக்கப்பட்டது.
- பாலர் பாடசாலையின் ஆசிரியைகள் ஊதியத்தை "மகளிர் அபிவிருத்தி பணியகத்தின்" உதவியுடன் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- படித்த வேலையற்ற யுவதிகளுக்காக தையல்பயிற்சி நிலையம் அமைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது.

**1995ம் ஆண்டில் எமது நிர்வாகசபையினரால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள்**

- எமது கிராம மக்களின் நன்மை கருதி (உள்ளூராட்சி) நல்லூர் பிரதேச சபையின் உதவியுடன் குழாய்க்கிணறு அமைத்து அதற்கு கைப் பம் போடப்பட்டது.
- படித்த வேலையற்ற யுவதிகளுக்கான தையல் பயிற்சி வழங்கும் முகமாக யாழ்

தொழிற்திணைக்கள உதவியுடன் தையல் பயிற்சி நிலையம் அமைத்து பயிற்சிகள் அளிக்கப்பட்டது.

- காரைக்கால் மைதானம் எமது நிர்வாகசபையினராலும் பொதுமக்கள் உதவியுடனும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

**1999ம் ஆண்டு எமது சபையினரால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள்**

- வறிய விதவைக் குடும்பத்தினருக்கு புனர் வாழ்வுத்திட்டத்தின் உதவியுடன் வீட்டுத்திட்டம் அமைத்துக் கொடுத்தது.
- பாலர்பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு, புனர்வாழ்வுத் திட்டம் நிறுவனத்தின் உதவியுடன் வழங்கப்பட்டது. அத்துடன் மாணவர்களுக்கான இலவச சீருடை (பொது நிறுவனங்களின் உதவியுடன்) வழங்கப்பட்டது.
- மாலை நேர வகுப்புக்கள் ஆரம்பித்து அவர்களுக்கு இலவசக்கல்வி மற்றும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது.
- பாலர்பாடசாலை ஆசிரியை ஊதியத்தை "மகளிர் அபிவிருத்தி பணியகத்தின்" உதவியுடன் இயங்கச் செய்யப்பட்டது.

**1999ம், 2000ம் ஆண்டுகளில் எமது நிர்வாக சபையினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி உட்பட்ட செயற்திட்டங்கள் பற்றிய அறிக்கை**

- 1999ம் ஆண்டு எமது பாலர் பாடசாலை மாணவர்களுக்கு தனியார் நிறுவனங்களின் உதவியின் 26 மாணவர்களுக்கு இலவசமாக சீருடை தைத்து வழங்கப்பட்டது.
- பாடசாலை மாணவர்களுக்கு "புனர்வாழ்வு நிதியத்தின்" உதவியுடன் சத்துணவு பெற்று வழங்கப்பட்டு வந்தது.
- 1999ம் ஆண்டு பாலர் பாடசால்ல மாணவர்களுக்கான வருடாந்த பாலர் விளையாட்டும் போட்டி சிறப்பாக நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பெறுமதி மிக்க வெற்றிப் பரிசில்களும், விசேட பரிசில்களும் சகல மாணவர்களுக்கும் சிறப்புப் பரிசில்களும் வழங்கப்பட்டன.
- 1999ம் ஆண்டுகளில் எமது கிராமத்தில் க.பொ.த சாதாரண தர பரீட்சைகளிலும், க.பொ.த சாதாரண உயர்தர பரீட்சைகளிலும் சித்தியடைந்த 11 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டது.
- 1999ம் ஆண்டு தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கல்வியிலும் மாணவர்களுக்கிடையே சைவசமய பாடப்பரீட்சை நடத்தப்பட்டு சித்தியடைந்த 87 மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.
- வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்பு கொண்டு நிலையத்தின் பிரதான வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டது.

- கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலை பாடசாலையில் அமைக்கப்பட்ட மலசல கூடத்திற்கு சிரமதானப் பணிமூலம் குழி வெட்டி கொடுக்கப்பட்டது.
- எமது பகுதியில் கல்வி கற்று வரும் வசதிகள் குறைந்த மாணவர்கள் 05 (ஐந்து) பேருக்கு யாழ்ப்பாண சத்திய சாயிபாபா சேவை நிறுவனத்தினரின் உதவியுடன் சிறிய தொகைப் பணம் வைப்பில் இட்டு சேமிப்பு வங்கிப்புத்தகம் வழங்கப்பட்டன.
- 2000ம் ஆண்டு பாலர் பாடசாலை மாணவர்களிடையே பாலர் விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டு மாணவர்களுக்கு வெற்றிப் பரிசில்களும், விசேட பரிசில்களும், சிறப்பு பரிசில்களும் வழங்கப்பட்டன.
- 2000ம் ஆண்டு பாலர் பாடசாலை மாணவர்களுக்கு தனியார் நிறுவனங்களின் உதவியுடன் 42 மாணவர்களுக்கு இலவசமாக பாடசாலைச் சீருடைகள் வழங்கப்பட்டன.
- 2000ம் ஆண்டு ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையிலும் க.பொ.த தர சாதாரண பரீட்சையிலும், க.பொ.த உயர்தர பரீட்சைகளிலும் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அவ்வரிசையில் புலமைப் பரிசில் பரீசையிலும் க.பொ.த உயர்தரப பரீட்சையிலும் சித்தி அடைந்த தலா ஒவ்வொரு மாணவனுக்கும் பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்பட்டன.

**2001ம் ஆண்டு 2002ம் ஆண்டின் எமது நிர்வாக சபையினரால் மேற்கொண்ட வேலைத் திட்டங்கள்**

- எமது முயற்சியால் நல்லூர் பிரதேச சபையின் மூலம் கோண்டாவில் தில்லையம்பதி வீதி செப்பனிடப்பட்டது.
- மாலை நேர வகுப்பு மாணவர்களுக்கு யாழ்மாவட்ட சர்வோதய நிறுவனத்தின் அனுசரனையுடன் இலவச அப்பியாச கொப்பி வழங்கப்பட்டது.
- விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கும் முகமாக எமது சங்கத்தின் முயற்சியால் சர்வோதய நிறுவனத்தின் மூலம் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டது.
- மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் முகமாக சர்வோதய நிறுவனத்திடம் இருந்து ஒரு தொகை பாடப்பயிற்சி புத்தகங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு வழங்கப்பட்டது.
- சர்வோதய நிறுவனத்துடன் முன்னைய தொடர்புகள் நாட்டின் சூழ்நிலைகள் காரணமாக தொடர்புகள் ஆற்றுப்போய் இருந்தது மீண்டும் எமது காலப்பகுதியில் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது.
- 2001ம் ஆண்டு க.பொ.த தர சாதாரண பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி கௌரவிக்கப்பட்டது.
- வீதிகள் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது. சங்கத்தின் புதிய கட்டிடம் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று, இதற்குரிய அடிக்கல் நாட்டுவிழா தைப்பூசத் தினத்தன்று உள்ளூராட்சி ஆணையாளர் ரி.வி.கிஸ்ணசாமி அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்டது.

**2002ம் ஆண்டு எமது நிர்வாகசபையால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி உட்பட்ட செயற்திட்டங்கள் பற்றிய அறிக்கை**

- எமது சங்கத்தின் புதிய மாடி கட்டிடம் பல இலட்சம் ரூபா செலவில் பொதுமக்களின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றன.
- பாலர் பாடசாலை மாணவர்களுக்கு நலன் விரும்பிகளின் உதவியுடன் 30 மாணவர்களுக்கு இலவச சீருடைகள் தைத்து வழங்கப்பட்டது.
- பாலர் பாடசாலை மாணவர்களுக்கு வருடாந்த பாலர் விளையாட்டுக்கள் நடாத்தப்பட்டு பெறுமதி மிக்க பரிசில்கள், சிறப்பு பரிசில்கள் வழங்கப்பட்டது.
- 2008ம் ஆண்டு தில்லையம்பதி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு இடையில் சமயபாட பரீட்சைகள் நடத்தப்பட்டு 40 மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப் பட்டது.
- மாலைநேர இலவச வகுப்புகள் தொடங்கி வகுப்புகள் நடத்தப்பட்டது. அத்துடன் சர்வோதய நிறுவனத்தின் உதவியுடன் பாட பயிற்சிபுத்தகங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு மாணவர்களுக்கு அவை கற்பதற்கு வழங்கப்பட்டது.
- எமது கிராமத்தில் மலசலகூடம் இல்லாதவர்களுக்கு உதவும் பொருட்டு சீமெந்து பக்கற்றுகளும், பேசனும் வழங்கப்பட்டது.


**2003ம் ஆண்டு எமது நிர்வாகசபையால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி உட்பட்ட செயற்திட்டங்கள் பற்றிய அறிக்கை**

- எமது சங்கத்தின் புதிய மாடிக்கட்டிடம் பல இலட்சம் ரூபா செலவில் பொதுமக்களின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது.
- பாலர் பாடசாலை மாணவர்களுக்கு லண்டனில் உள்ள நலன் விரும்பிகளின் உதவியுடன் 30 மாணவர்களுக்கு இலவச சீருடைகள் தைத்து வழங்கப்பட்டது.
- பாலர் பாடசாலை மாணவர்களுக்கு வருடாந்த விளையாட்டு விழாவும் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு சமயபாட பரீட்சைகளும் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டது.
- மாலைநேர இலவச வகுப்புகள் தொடக்கப்பட்டு அவர்களுக்கு சர்வோதய நிறுவனத்தின் உதவியுடன் பாடப்பயிற்சிபுத்தகங்கள் வழங்கப்பட்டது.
- மலசலகூடம் இல்லாதவர்களுக்கு உதவும் பொருட்டு சீமெந்து பக்கற்றுகளும் பேசனும் வழங்கப்பட்டது.
- கிராம மாணவர்களின் கல்வி வளர்சியினை முன்னிட்டு மத்திய கிராம முன்னேற்றச் சங்க "கல்வி மேம்பாட்டு பேரவை" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

இவ்வாறாக எமது நிலையம் தொடர்ந்து தனது பணிகளில் முன்னோக்கிச் செல்கின்றது.

**தி.விக்கினேஸ்வரன்**
**செயலாளர்.**

# மத்திய கிராம முன்னேற்றச் சங்க முன்னாள் செயலாளரின் உள்ளத்திலிருந்து ...



மலரும் பொன்விழா அகவையில் எங்கள் மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் என்றென்றும் வாழ்க! வீட்டை அலங்கரிக்க பல காரியங்கள் செய்வோம் எங்கள் கிராமத்தின் பொன்விழாவை அலங்கரிக்க நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்திடுவோம். எம் கிராமத்தை நினைத்து நல்லதையே செய்தால் எங்கள் வாழ்நாளில் நாம் என்றென்றும் தலை நிமிர்ந்து வாழ்வோம். நான் எனது கிராமத்து உறவுகளுடன் சிலவிடயங்கள் பகிர்ந்து கொள்ள எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை இட்டு இப்போது நான் பெருமை கொள்கிறேன்.

நான் தற்போது காலத்தின் சூழ்நிலையால் புலம் பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வசித்து வருகிறேன் எனக்கு இங்கு வாழ்வதற்கு இந்த நாட்டு அரசாங்கம் வதிவிட உரிமையை வளங்கி உள்ளது அதற்கு உரிய முக்கிய காரணம் நான் எனது தாய் மண்ணில் வாழ்ந்த காலப்பகுதியில் எனது கிராமத்துக்காக என்னால் ஒரு சிறுதுளி சேவை செய்ய கிடைத்த ஒரு சந்தர்ப்பம், அதன் மூலம் நான் பெற்று கொண்ட அனுபவம் தான் இந்த நாட்டு குடிவரவு அதிகாரிகள் என்னிடம் நான் புலம் பெயர்ந்து வந்ததற்கு உரிய காரணத்தையும் நான் தாய் நாட்டில் என்ன செய்தேன் என்பதையும் பகிர்ந்து கொண்டார்கள். அப்போது நான் என் கிராமத்துக்காக செய்த சேவையை விபரிக்க சொன்னார்கள் அந்தநேரம் நான் எனது பொது சேவையின் மூலம் பெற்று கொண்ட அனுபவமும் தற்போதைய நிர்வாகிகளால் எனக்கு வழங்கப்பட்ட நற்சான்றிதழ்களும் என்னை உறுதிப்படுத்தியது இவற்றை கொண்டு தான் எனக்கு இந்த நாட்டில் வதிவிட அந்தஸ்து கிடைக்க பெற்றது அப்போது தான் எனக்கு புரிந்தது நான் எனது கிராமத்துக்காக செய்த சிறுதுளி சேவையின் மகிமை நான் இன்றைக்கும் எனது கிராமத்தில் வாழ்ந்த காலப்பகுதியில் சிறுசேவை செய்ய கிடைத்த சந்தர்ப்பத்தை எனக்கு கிடைத்த ஒரு அதிஸ்டமாகத்தான் பெருமை கொள்கி றேன். ஆகவேதான் எமது இந்த கிராமமுன்னேற்றச் சங்கமானது எமது முன்னோர்களால் எமக்காக உருவாக்கப்பட்ட மிகப்பெரும் சொத்து இதனை கருத்தில் கொண்டு எமது வருங்கால இளையசமுதாயம் எமது கிராமத்தின் முன்னேற்றத்திற்காக ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டுமென அன்புரிமையுடன் கேட்டு கொள்கிறேன் எமது கிராமத்தின் வளர்ச்சியும் பெருமையும் நாம் எங்கு சென்றாலும் அதுவும் எம்முடன் சேர்ந்து செல்லும் இதை நான் எனது சொந்த அனுபவம் மூலம் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

ஒதுக்கப்பட்டாலும் ஒழுக்கதோடு உயர்ந்துநில்!
ஒடுக்கப்பட்டாலும் நேர்மையுடன் நிமிர்ந்து நில்!
உனது நலன் எப்போதும் இரண்டாவது என்று நினை!
கிராமத்து நலன் தான் இன்று முதலாவது என்று வாழ்!
நல்லதையே நினை என்றும் நல்லதையே செய்!
உன் வாழ்நாள் என்றும் உன்னை தலைநிமிர்த்தி வாழ்த்தும்!

உறங்கும் போதும் என் விழிகளுக்குள் – என்
கிராமத்தின் நினைவுகள் என்னாளும் மலரும்!
அந்தமலரும் நினைவுகளுடன் – நான்
தாய் மண்ணில் வாழ்வது போல்
புலம்பெயர் தேசத்திலும் வாழ்கிறேன்!

(புலம்பெயர்ந்து பிரான்ஸ் மண்ணில் வசித்து வரும்)
**செல்லையா தயாளன்**

# "பொன்விழா" சிறக்க வாழ்த்துவோமே!

சீர்மிகு ஈழவள யாழ்ப்பாணத்தின் திலகமன்ன
பேர்மிகு கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச்சங்கம் இன்றே
பார் புகழ்ந்திட பைந்தமிழ் பொன்விழா வெடுப்ப
ஊர்கூடி நன்விழாச் சிறக்க தில்லையம்பதி சிவகாமி காப்பதாமே!

ஈழமணித் திருநாட்டின் தமிழர் இனிய பண்பு
ஈடிணையில் லாச்சேவைகள் கல்வி யோடு
வாழுநெறி எம்மவர்க்கே காட்டி இந்த
வளம் நிறைந்த நற்சமூகம் வளர்த்துக் காத்தே
ஆழமனம் பயபக்தி அன்பு நேர்மை
அறிவாற்றல் வீரமொடு தீரம் தந்தே
சூழுதமிழ்ப் பண்பாடு வளர்த்த சமூகச்
சாலையிது பல்லாண்டு வாழி வாழி!

சுந்தரஞ்சே ருங்கலைகள் பெண்ணின் முயற்சி
சுகுண நல் நடையுடைகள் பாவனைகள்
தந்தபெரும் "மாதர்சங்கம்" யாழ் மண்ணில்
தலையாய பெருஞ் சிறப்புப் பெற்ற நிலையம்
சிந்தையிலே தமிழ்ப்பண்பு பண்பாடெல்லாம் "முன்பள்ளியுடனே"
சிறப்புடன் நிதம் ஓங்க "சிறுவர் கழகமும்" சேர்ந்தே
தந்திடும் வெற்றியும் "விளையாட்டுக் கழகமும்" கண்டே
தரணியில் பல்லாண்டு வாழி வாழி!

எண்ணரிய தாய்க்குலத்துக் கல்வி மான்கள்
எழுத்தாளர், தொழில்நுட்பக் கலைஞர் தம்மை
வண்ணமுற ஆக்கியிந்த வளமார் சமூகம்
வானத்துப் புகழ்பெறவே தந்த நிலையம்
கண்ணெனவே நம் கோண்டாவிலூர் பெருமையினை
காசினியில் மேன்மையுற வளர்த்த கோயில்
நண்ணிடவே நம்மவரின் "கல்வி மேம்பாட்டு பேரவையும்"
நானிலமே போற்றத் தந்த நிலையம் வாழி!

சின்னச் சின்ன சிந்தனைகள் செயலி லாற்றி
சிறப்புமிகு தமிழ்ப்பண்பு தன்னைக் காத்தே
நன்றெனவே தலையாய கடமை தன்னை
நம்மவர்கள் வாழ்ந்திடவே உழைத்த அன்னை
மண்ணதனில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தாய்
மகிழ்வுறச் சேவை செய்த தலைவர்களொடு
"பொன்விழா" சிறந்தோங்கச் செய்தவர்கள்
பல்லோரும் பார்போற்ற வாழி வாழி!

என் . பிறேமசீலன்
கோண்டாவில்.

# சமூக நிறுவனங்களில் மக்களின் பங்கு

"மக்கள் பங்கேற்பு" என்ற சொல் இன்று அபிவிருத்தி திட்டமிடலாளர்களாலும், சகல துறை நிறுவனங்களாலும் முன் வைக்கப்படுகின்றது. அபிவிருத்தியில் எதை, எங்கு, எப்படிச் செய்வது என்ற தெரிவை மக்களைக் கொண்டே எடுக்கும் நடைமுறையையே பின்பற்றுகின்றனர். அதிகாரிகள் மட்டத் தீர்மானங்களாக அல்லாது மக்கள் மட்டத் தீர்மானங்களே அபிவிருத்திச் செயன்முறையினுள் பின்பற்றப்படுகின்றது. அதாவது அடிமட்டத்திலிருந்து தேவை மதிப்பீடுகளும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டு அவை உயர்மட்ட முகாமைக்கு முன்னளிக்கப்படும் மாறுபட்ட உபாயம் பின்பற்றப்படுகின்றது.

இவ் அணுகு முறை அபிவிருத்தித் திட்டங்களது வெற்றியையும் நிலைத்திருக்கும் தன்மையையும் உறுதி செய்கின்றது.

மக்கள் பங்கேற்பு என்பது மக்களால் உருவாக்கப்பட்ட சமூக நிறுவனங்களில் மக்களின் பங்கு எனும் வரையறுக்கப்பட்ட எல்லைப் பரப்பை ஆராய இக்கட்டுரை முற்படுகின்றது.

சமூக நிறுவனங்கள் என்பதுவம் சமூக அடிப்படை நிறுவனம் (Community base organi - Zations - CBO's) என்பதுவும் பொதுவான கருத்தில் ஒன்றாக எடுக்கலாம்.

சமூக நிறுவனங்களின் தொடக்கமாகக் குடும்பம் என்ற அலகு உள்ளது. வருமான மீட்டல், கூடி வாழ்தல், வாழ்க்கைத்தரத்தை அபிவிருத்தி செய்தல், ஆத்மார்த்த திருப்தியை அடைதல், சந்ததிகளை உருவாக்கல், சமூகத்திற்கான பங்களிப்பைச் செய்தல் ஆகியவற்றை குடும்பம் என்ற அலகு ஆற்றுகின்றது. இத்தகைய குடும்பங்கள் பல சேர்ந்து தமது சமூக, வாழ்வியல் பொருளாதார, பண்பாட்டு தேவைகளை நிறைவேற்ற உருவாக்கும் அமைப்பே சமூக நிறுவனங்கள் எனலாம்.

இவற்றிற்கு உதாரணமாக சனசமூக நிலையம், விளையாட்டுக்கழகம், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம், விவசாயச் சம்மேளனம், கூட்டுறவு அமைப்புக்கள், வலிந்துதவும் சமூக சேவைகள் அமைப்புக்கள் ஆகியவற்றைக் காட்டலாம்.

மக்களால் மக்களுக்காக மக்கள் உருவாக்கிய இந்நிறுவனங்களில் சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களின் பங்கும் அவசியமானது. "தனிமரம் தோப்பு ஆகாது என்பது போல குடும்பம் என்ற அமைப்பு தனித்து இயங்காது". குடும்பங்கள் சேர்ந்து இயங்கும் போது தான் பிரதேசங்களின் மேம்பாடு என்பது சாத்தியப்படும்.

இன்றைய காலப்பகுதியில் மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை வடிவமைக்கும் திட்டமிடலாளர்கள் கீழ் வரும் 03 விடயங்களையும் தமது திட்டங்களில் வலியுறுத்துகின்றனர்.

01. மக்கள் பங்கேற்பு

02.பெண்களையும் பங்கேற்கச் செய்தல்

03. சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல்

இம்மூன்று அம்சங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கும்

பட்சத்திலேயே அரசாங்கங்களும் சர்வதேச உள்ளூர் தொண்டு நிறுவனங்களும் நிதி வழங்கலை மேற்கொள்கின்றன.

ஆகவே இங்கு முதலாவதாகக் கூறப்படும் மக்கள் பங்கேற்பு என்ற விடயத்தை சமூக நிறுவனங்களின் மூலமே ஆற்ற முடியும். சமூக நிறுவனங்கள் தாம் சிறப்பாக இயங்க மக்களின் பரந்த பங்களிப்புத் தேவை.

ஆனால் பெரும்பாலான பிரதேசங்களைப் பார்ப்போம் ஆயின் அங்குள்ள சமூக நிறுவனங்கள் ஒரு சிலரே மாறி மாறிப் பொறுப்புக்களையும், பதவிகளையும் வகிக்கின்றனர். பெருமளவான மக்கள் ஒதுங்கி இருக்கும் தன்மையைக் கடைப் பிடிக்கின்றனர்.

இதனால் அரசினால் முன்னெடுக்கப்படும் திட்டங்களும். அரச சார்பற்ற நிறுவனங்களால் முன்னெடுக்கப்படும் திட்டங்களும் பூரண வெற்றியைக் காணவில்லை அல்லது தோல்வியடைகின்றன. அல்லது நீடித்து நிலைத்திருக்கும் தன்மையை இழக்கின்றன.

இதற்கான காரணம் மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் இன்று சமூக நிறுவனங்களால் தேவை மதிப்பீடு செய்யப்பட்டு கருத்திட்டங்களாக முன்மொழியப்பட்டு அவை மேல்மட்ட முகாமையிடம் கையளிக்கப்படுகின்றன.

அங்கு அங்கீகரிக்கப்பட்டு மக்களை நோக்கியதாகச் சமூக நிறுவனங்கள் கூலமாக திட்ட அமுலாக்கம் செய்யப்படுகின்றன.

ஆகவே சமூக நிறுவனங்களில் மக்களின் பங்கேற்பு நிறைவாக இருக்குமிடத்தே திட்டங்களின் வெற்றி உறுதிப்படுத்துவதுடன் தொடருறு பயன்களும் நிலைத்திருக்கும் தன்மையும் இருக்கும்.

எப்படியெனில் இவ் அபிவிருத்தி எம்மால் ஆக்கப்பெற்றது, இதற்காக நாமும் உழைத்தோம், வியர்வை சிந்தினோம், இது எமக்கான அபிவிருத்தி என்ற உணர்வூட்டலால் மக்கள் தூண்டப் பெறுவர்.

இதனால் தான் அபிவிருத்திச் சிந்தனையாளர்கள் மக்கள் பங்கேற்பு என்பதனை அபிவிருத்தித் திட்டம் கட்டாயம் கொண்டிருக்க வேண்டுமென ஆணித்தரமாக வலியுறுத்துகின்றனர்.

மாறாக பரந்துபட்ட மக்கள் பங்கேற்பு இல்லாமல் சமூகத்தில் சுயநலப் போக்குள்ள, பிரமுகர் தன்மையை, விளம்பரத்தை விரும்பும் மனிதர்களால் சமூக நிறுவனங்கள் பிரதிநிதித்துவப்படுமிடத்து அபிவிருத்தி எனும் பதம் கேள்விக்குரியதாகவும், கேலிக்குரியதாகவும் மாறிவிடும்.

திட்டத்தின் இலக்கு நிறைவேற்றப்படாது போகும் நிலைத்திருக்கும் தன்மை இருக்காது. நிதி, திட்டத்தின் பயன் வளங்கள் குறிப்பிட்ட சிலரையே சென்றடையும், துஷ்பிரயோகம் நிகழும்.

இதனால் சமூகத்தின் ஒரு சிலர் கொழுத்த மனிதர்களாகவும், ஏனையோர் நலிவுற்றும் இருக்கும் எதிர்மறை அபிவிருத்தி எனும் முரண் நிலை உருவாகும். இந்நிலையையும் நாம் சமூகத்தில் பார்க்க முடிகிறது. சமூக நிறுவனங்களில் பொறுப்புக்களை வகிப்போர் பதில் சொல்லக் கூடியவர்களாக மக்களால் ஆக்கப்படுவது மக்களின் உறுதியான பங்கேற்பினால் மட்டுமே சாத்தியமாகும்.

ஆகவே சமூக நிறுவனங்களுடன் மக்கள் நிறைவான பங்கேற்பை செய்யும் போதே திட்டங்களின் இலக்குகளை அடைவது சாத்தியமானதாகும். ஆகவே இத்திட்டங்களின் பயனாளிகளான மக்கள் பூரண பயனைப் பெறவிரும்புவார்களாயின் சமூக நிறுவனங்களில் பங்கேற்று அவற்றைப் பலப்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும்.

# விஞ்ஞானமும் சமூகமும்

இன்றைய யுகம் விஞ்ஞான யுகம் எனப் படுகிறது. மனித வாழ்க்கையோடு விஞ்ஞானம் பிரிக்க முடியாத வகையில் தொடர்பு கொண் டுள்ளது. சமூக முன்னேற்றத்திற்கே விஞ்ஞானம் இன்று அடித்தளமாக அமைந்துள்ளது. எனவே விஞ்ஞானத்திற்கும் சமூகத்திற்குமிடையேயுள்ள தொடர்பினை ஆராய்தல் பயனுடையதாகும்.

சமூகம் என்பது பல்வேறு சேர்வைகளின் பிரதிபலிப்பாகும். பெரும்பாலான சமூக அமைப் புக்கள். இன, மொழி, பண்பாடு, பழக்கவழக்கங் கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றது. இத்தகைய கூட்டத்தினர் ஓர் இடத்தில் கூடி வாழும் போது அவர்களை ஒரு சமூகத்தினர் என்றழைப்பர். இத்தகைய சமூகம் இன்று முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்வதற்கு விஞ்ஞானம் துணை செய்கிறது.

விஞ்ஞானம் இன்று மனித வாழ்க்கை யுடன் பிரிக்க முடியாத வகையில் தொடர்பு கொண்டுள்ளது. நாளுக்கு நாள் இத்தொடர்பு வலுப்பெற்று வருகிறது.

ஆரம்பகாலத்தில் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த மனிதர்கள் நாகரிகமுற்று நல்ல பண் பாடுகளைக் கற்றுக்கொள்வதற்கு விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களே அவர்களுக்குத் துணை செய்தன எனலாம். நோய்களால் பாதிப்புற்றோ ருக்கும் வாழ்க்கை வசதியின்றித் தவிர்த் தோருக்கும் விஞ்ஞானம் வழிகாட்டியாக அமைந் தது. ஜென்னர் என்பவர் கண்டுபிடித்த அம்மைப் பால் ஏற்றும் பணியானது மனித குலத்தைக் கொடியஅம்மை நோயில் இருந்தும் காப்பாற்ற உதவியது. தோமஸ் அல்வா எடிசன் கண்டறிந்த மின்சாரக்குமிழ் மக்கள் சமூகத்தை இருளி லிருந்து ஒளிமயமான உலகுக்குள் இட்டுச் சென்றது. லூயிபாஸ்ருடைய நுண்கிருமி தொடர் பான ஆய்வு மேரிகியூரி அம்மையாரின் றேடியம் தொடர்பான ஆய்வு எல்லாம் மக்கள் சமூகத்திற் குக் கிடைத்த அரிய பயன்தரும் விடயங்களாகும். மருத்துவத் துறையை மட்டும் எடுத்துக் கொண் டால் விஞ்ஞான கண்டு பிடிப்புக்களால் தொற்று நோய்கள் பல தடுக்கப் படுகின்றன. குழந்தைகட்கு முக்கூட்டு மருந்தேற்றுதல், போலியோ நோய் தடுப்பு சொட்டு மருந்தளித்தல் என்பவற்றை இதற்கே எடுத்துக் காட்டாக கூறலாம்.

விஞ்ஞான கண்டுபிடிப்புக்களில் ஒன்றான மின்சாரம் இன்று சகல தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு ஏதோ ஒரு வகையில் பயன்படுத்தப் படுகிறது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் ஏற்பட்ட தொழில்நுட்பம் சமூக முன்னேற்றத்திற்கு இன்று பெரிதும் உதவுகிறது. சமூகத்தின் பயன் பாட்டுக்கு விஞ்ஞானம் இன்று பெரிதும் உதவு கிறது இணையம் மூலமே உலகமே ஒரு கிராம மாகக் சுருங்கிவிட்டது. முன்பின் தெரியாதவர்க ளோடு கூட இணையத்தின் மூலம் தொடர்பு கொள்ளக்கூடிய வாய்ப்பு விஞ்ஞானத்தின் வளர்ச் சியினால் இன்று மக்கள் சமூகத்திற்குக் கிட்டி உள்ளது.

விஞ்ஞானத்தின் வியத்தகு முன்னேற்றம் மக்கள் சமூகத்திற்கும் பல்வேறு துறைகளில் பயன் தருகின்ற போதிலும் அதனால் ஏற்படும்

பாதிப்புக்களும் சில உள்ளன. அணுசக்தியைக் கண்டுபிடித்த விஞ்ஞானி அதனை ஆக்க பணிகளுக்கே பயன்படுத்த விரும்பினார். ஆனால் அது இன்று அழிவு வேலைகளுக்கே பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. இரண்டாம் உலகப் போரின் போது அமெரிக்கா, யப்பானில் உள்ள ஹிரோஷிமா, நாகசாதி ஆகிய நகரங்களின் மீது அணுகுண்டுகளைப் போட்டு பல்லாயிரம் மக்களைப் பலி கொண்டதை நாம் மறக்க முடியாது. இன்றும் அணுசக்தி ஆயுதங்களை தயாரிப்பதில் வல்லரசுகள் போட்டி போட்டுக் கொண்டு செயற்படுகின்றன.

இவை எல்லாம் விஞ்ஞான சமூகத்திற்கு ஏற்பட்ட பாதிப்புக்களாகும். இத்தகைய அழிவு வேலைகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்தாது ஆக்க வேலைகளுக்கு அதனை பயன்படுத்து மாறு மக்கள் சமூகம் இன்று குரல் கொடுத்து வருகின்றது.

சுருங்கக்கூறின் விஞ்ஞானம் இன்று மக்கள் சமூகத்தின் மீது பிரிக்க முடியாத வகையில் செல்வாக்கு செலுத்துகின்றது. அதன் மூலம் மக்கள் சமூகம் பெறும் நன்மைகள் பலவாயினும் தீமைகள் சிலவும் உண்டென்பது தெளிவாகிறது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி எதிர்காலத்தில் மக்கள் சமூகத்திற்கு வியத்தகு பயன்களை வழங்குமென எதிர்பார்க்கலாம்.

## துணுக்குகள்

***கஷ்டங்கள் மனிதனை உற்சாகப்படுத்துவதே அன்று அவன் தைரியத்தை குறைப்பதற்கு வருவதில்லை (ஷேக்ஸ்பியர்)***

***இன்பங்கள் சேர்ந்து வருவதில்லை துன்பங்கள் தனியே வருவதில்லை (ஷேக்ஸ்பியர்)***

***மனிதர்களை அன்பினால் அரவணைத்துக் கொள்வதன் மூலமே இலகுவில் வசப்படுத்த முடியும் (ஷேக்ஸ்பியர்)***

# கல்வியின் சிறப்பு

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. அதனிலும் அரிது கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது என. மானிடப் பிறப்பின் மேன்மையை உயர்த்திப் பாடியுள்ளார் எமது தமிழ் மூதாட்டியாம் ஔவையார்.

ஆம், பிறப்புக்கள் பல, அதனில் மானிடப் பிறப்பு மகிமை பொருந்தியது. சிறப்பு வாய்ந்தது. காரணம் விலங்குகளில் இருந்து மனிதனைப் பிரித்துப் பார்ப்பது பகுத்தறிவாகும். இப்பகுத்தறிவு எதனால் மனிதனுக்கு உருவாகின்றது. அவன் கல்வியறிவு உடையவனாகவும், பண்புள்ளவனாகவும், ஒழுக்கமுள்ளவனாகவும் திகழும்போது மட்டுமே. இல்லை எனில் அவன் விலங்கு நிலைக்குத் தள்ளப்படுவான். மானிடராகப் பிறந்தவர் ஒவ்வொருவருக்கும் கல்வி என்பது மிக மிக அவசியமானது. காரணம் இதனால் தான் மனிதன் மேன்மையுறுகிறான்.

மனிதனுக்குக் கிடைக்கும் செல்வங்கள் பலவகை. அவற்றுள் கல்வியும் ஒன்றாகும். இதனை ஈடு இலாச் செல்வம் என்பார் பெரியோர். - கேடில் விழுச் செல்வம் கல்வி - என்பது வள்ளுவர் வாக்கு. அதாவது கேடு இல்லாத சிறந்த செல்வம் என்பது இதன் பொருளாகும். காரணம் பிற செல்வங்கள் கேட்டையும் விளைவிக்கும். அது மட்டுமல்ல நெருப்பினால் அழியக்கூடியன. நீரினால் அழியக்கூடியன. ஆனால் கல்விச் செல்வமோ நீரினாலோ, நெருப்பினாலோ அழியக்கூடியன அல்ல. கள்வரால் கொள்ளையிட முடியாது. வெள்ளத்தாலோ நெருப்பினாலோ அழியக்கூடியன அல்ல.

கொள்ளையிட முடியாது. பிறருக்குக் கொடுக்கும் தோறும் குறைவுபடாது. பிறசெல்வங்கள் பங்காளிகளினால் பங்கிடக்கூடியது. ஆனால் கல்வியோ அவ்வாறு அல்ல. இக் கல்வியின் சிறப்புக்களை உணர்ந்து திருவள்ளுவர் தமது திருக்குறளில் கல்வி எனும் அதிகாரத்தில் பத்துக் குறள்களில் சிறப்பாகக் கூறிச்சென்றுள்ள அதே வேளையில் கல்வி கல்லாமையினால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி கல்லாமை என்னும் அதிகாரத்தில் கூறிச் சென்றுள்ளார்.

கல்வியைக் கசடறக் கற்கவேண்டும் எனவும், கற்றபடி ஒழுகவேண்டும் எனவும் தனது முதலாவது குறளில்

கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

என மிக அழகாக எடுத்துக் கூறியுள்ளார். ஒரு நாட்டிற்கு மன்னனின் கடமைகள் அளப்பரியது. ஆனால் அவனுக்கு தன் நாட்டிலே தான் சிறப்புண்டு. பிறநாடுகளில் அவ்வளவு சிறப்பு இராது. ஆனால் கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு எனக் கூறியுள்ளனர். இதிலிருந்து ஓர் உண்மை புலப்படுகின்றது. ஒரு மன்னனிடத்திலுள்ள செல்வங்கள் அனைத்திலும் கற்றவனிடத்தில் இருக்கும் கல்விச் செல்வமே உயர்ந்து காணப்படும் என்பதாகும்.

இக்கல்விச் செல்வம் சுரங்கம் போன்றது. ஏனைய செல்வங்கள் ஒருவனிடம் சேர்ந்தால் அவனிடத்தில் நில்லாது. போகிறேன், போகிறேன் எனக் கூறி அவனை விட்டு விலகி ஓடிப்போய் விடும். ஆனால் கல்வி என்ற அந்தச் செல்வமோ

ஒருவனை முறைப்படி அடைந்துவிட்டால் அவனது வாழ்விலும், தாழ்விலும் மட்டுமல்லாமல் சாவிலும் கூட உடனிருந்தே அழியும் எனக் கூறப பட்டுள்ளது. அது மட்டுமல்ல கல்வி தலைமுறை தலைமுறையாக மணம் கமழ்ந்து கொண்டி ருக்கும். ஆனால் பிற செல்வங்களைப் பொறுத்த வரையில் அடுத்த தலைமுறை வரை நிலைத் திருக்குமோ என்பது கேள்விக்குறியாகும்.

வள்ளவர் ஓர் இடத்தில் கண்ணுடையவர் யார் எனக் கூறிச் சென்றுள்ளார் என்றால் கற்றோரையே கூறிப் போந்துள்ளார். ஏனையவர் களுடைய கண்கள் கண்கள் அல்ல எனவும் கல்லாமையினால் ஏற்படும் இழிநிலையைத் தனது ஈரடிக் குறளில் மிக அழகாகக் கூறிச் சென்றுள்ளார்.

கண்ணுடைய என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர் எனவும்

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப்புடைத்து"

அதாவது ஒருவன் கற்ற கல்வி அவனுக்கு அந்தப் பிறப்பிற்கு மட்டுமல்ல ஏழு பிறப்பிற்கும் நின்று உதவும் எனவும் கல்வியின் சிறப்பினைக் கூறியுள்ளார்.

செல்வந்தன் முன் ஏழை அதாவது வறியவன் நிற்பது யாவரும் அறிந்த உண்மை யாகும். ஆனால் கற்றாரை முன்னே கல்விதான் நிற்பது காணச் சகிக்க முடியாத காட்சியாகும். இதனை கல்லாமை எனும் அதிகாரத்தில் ஒரு குறளில் மிக அழகாக கூறியுள்ளார். "கல்லாதான் சொற்காமுறுதல் முலையிரண்டும் இல்லாதான் பெண்காமுற்றற்று" எனவும் "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றோரோடு ஏனையவர்" எனவும் அதாவது "கல்லாதவன் விலங்குக்கு ஒப்பாவான்" எனவும் கூறியுள்ளார். எனவே தோண்டாத மணலுக்குள் நீர் மறைந்திருப்பது போலக் கல்லாதார் உள்ளத்தில் அறிவும் இலைமறைகாய் போல் மறைந்திருக்கிறது. தோண்டத் தோண்ட நீர் சுரப்பது போல் கற்கக் கற்க அறிவும் சுரக்கிறது. எந்த அளவிற்குத் தோண்டி னாலும் அந்த அள விற்கு நீர் நிரம்பிக் காணப்படு வது போல எந்த அளவிற்குக் கற்றாலும் அந்த அளவிற்கு அறிவும் நிரம்பிக் காணப்படும். இதனை வள்ளுவர் பின்வரும் குறள் மூலம் விளக் கிச் செல்கின்றார்.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு"
எனக் கூறிப் போற்றுகின்றார்.

அது மட்டுமல்ல இக்கல்வியானது கடல் போன்றது. ஒருவன் வாழ்நாள் முழுவதிலும் படிப்பிலும் அதனை முற்றுப் பெற்றுவிட முடியாது. கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு எனக் கலைமகள் கூறுகின்றாள். ஆயகலைகள் அறுபத்து நான்கு எனக் கூறுகின்றாள். கல்வி யைத் தருபவள் கலைமகள் எனவும் கூறுகின் றனர். அதனால் தான் கலைமகளைக் கல்வியின் தாய் எனவும் போற்றி வழிபடுகின்றனர். கலை மகளை புலவர் முதல் கவிஞர் வரையில் போற்றி யும் ஏற்றியும் வழிபட்டு வருவதில் எதுவித சந்தேக மும் இல்லை. காரணம் அவர்கள் நாவில் எப்போதும் உறைபவள் கலைமகளே ஆவாள்.

கலைமகளை வழிபட்டு வருபவர்களிடத்து அறிவு மேலோங்கிக் காணப்படும். அதேநேரம் கல்லாத மக்களிடத்தும் அறிவு காணப்படும். எனினும் அவ்வறிவு குட்டைகளில் தேங்கிக் கிடக்கும் கலங்கிய நீர் போன்றதே கற்றவருடைய அறிவோ ஆறுகளில் ஊறிச் சிலுசிலுத்து ஓடுகின்ற தெளிந்த நீரைப் போன்றது. கற்றவரும் கல்லாதவரும் மக்களே அன்றிக் கற்களே ஆயினும் முன்னது வைரக்கல் பின்னது கருங்கல் ஆகும்.

கல்லாத மக்கள் விலங்குகள்மட்டுமல்ல அவர்கள் நிறைந்து காணப்படும் நாடும் நாடாகா

அது காடு எனக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் அந்நாட்டை ஆளும் மன்னனும் நாடாளும் மன்னாக இல்லாமல் காடாளும் வேடனாகவே காட்சியளிப்பான்.

அத்துடன் இக்கல்வியை இளமையிற் பெற வேண்டிய ஒன்று. முதுமையிற் பெறவேண்டிய செல்வங்கள் அனைத்திற்கும் இது உற்ற துணை யாக இருக்கும். இளமையிற் கல்வியை இழந்த வன் இழந்தவனே கல்வியை இழந்தவன் கண் ணையும் இழந்தவன் ஆகின்றான். அத்துடன் கற்றவன் முகத்திலிருப்பதே கண் மற்றது புண் என்பது வள்ளுவர் கூற்று ஆகும்.

இன்னோர் இடத்தில் கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே எனவும் கல்லா ஒருவன் குலநலம் பேசுதல் நெல்லினுட் பிறந்த புதராகுமே. எக்குடிப்பிறப் பினும் யாவரே ஆயினும் அக்குடியிற் கற்றோரே மேவிடத்தில் வைத்துப் போற்றப்படும். இதனைப் பின்வரும் குறள் மூலம் விளக்கியுள்ளார். வள்ளு வப் பெருந்தகை

மேற்பிறந்தாராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு

எனக் கல்வியின் சிறப்புப் பற்றி புலவர்கள் பலவாறாகப் பாடியுள்ளனர்.

கல்வியின் நோக்கம் மக்களைச் சிந்திக்கத் தூண்டுவதாகும்.

## தடைகள் எதிர்ப்படும்போது நல்லதையே சிந்திப்பது எப்படி?

"வெற்றிக்கான மூன்று படிகள் – கற்பனை, அறிவு, துணிவு"

"மனத்தின் படைப்புத் திறனை உணர்ந்து கற்பனையைப் பயன்படுத்தி முன்னேற்றத்தை நோக்கியே செல்லுங்கள்"

"பொது அறிவைப் பயன்படுத்தி நீங்கள் பார்க்கும் அனைத்தையும் நடுநிலையுடன் மதிப்பீடு செய்து வாழுங்கள்"

துணிவைப் பயன்படுத்தி உறுதி செய்யப்பட்ட தீர்மானத்தை விடாமுயற்சி யுடன் செய்து முடியுங்கள்"

– எல்மர் வீலர்




செல்வா எலக்றிக்கல்ஸ்

SELVAH ELECTRICALS

மின்சாரப் பொருட்கள், எஸ்லோன் பைப் வகைகள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

இல. 21, பலாலி வீதி, திருநெல்வேலி.
தொ. பே. 021 3218617, 021 459024

No. 21 Palaly Road, Thirunelvely
Tel: 021 3218617, 021 4590524

# நாடகக் கலையும் நாமும்

நாடகம் ஒரு கலைவடிவமாகும். நாடகத்தின் தோற்றம் தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அதன் பெறுபேறாகப் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. பேராசிரியர் ஜோர்ச் தொம்சன் கருத்துப்படி சடங்கிலிருந்தே நாடகம் தோற்றம் பெற்றது என்கிறார். பருவகால மாற்றங்களினால் நாடகம் பல புத்தம் புதிய மாற்றங்களைத் தன்னகத்தே கொண்டு காணப்பட்டது.

இளம் பிள்ளைகளுக்கு மூளை வேகமாக வளர்ச்சி அடைகிறது. இக்காலத்திலேயே அவர்களுக்கு அறிவுப் பசியும் நிறைய ஏற்படுகிறது. சிறு பிள்ளைகளை எடுத்து நோக்குவோமானால் அவர்களின் அறிவுப்பசிக்கு நல்ல தீனி போட்டு பிள்ளைகளது அறிவை வளர்க்க வேண்டியது பெற்றோரினதும், ஆசிரிய ரினதும் கடமையாகும். மூளை மட்டும் வளராது மனமும் வளர்க்கப்பட வேண்டும்.

குழந்தைகளுக்கு இயல்பாகவே கலை உள்ளம் அமைந்திருக்கிறது. கதை பாட்டு, நடனம், நாடகம் போன்றவற்றின் மூலம் போதிக்கப்படுகின்ற விடயங்களை அவர்கள் விரும்பிக் கற்பர். நாடகத்தின் மூலம் சொல்லப் படும் விடயம் பசுமரத்தாணி போல குழந்தைகளது உள்ளத்தில் பதிந்து விடும். நல்ல நாடகங்களைப் பார்த்து இரசிப்பதன் மூலம் பிள்ளைகளின் கல்வி நிலை வளர்ச்சியடையும், பாத்திரம் தாங்கி நடிக்கும் பொழுது தங்களது நிலையை மறந்து, கூச்சம் நீங்கி, மேடையேறி நடிக்கின்ற தகமை உருவாகின்றது.

நடிப்பு என்பது ஒரு தனிக்கலை. அது இயல்பாகவே அமையும் நடிப்புடன் சேர்ந்து கிரகிப்பு, கற்பனை, உணர்ச்சி வெளிப்பாடு, சாதுரியமான உரையாடல், தெளிவான பேச்சு, மொழியாட்சி, கூச்சமின்மை, துணிவு, தன்னம்பிக்கை, மேடைப் பேச்சு, பாட்டு, அபிநயம், உடற்பயிற்சி ஆகியவற்றுடன் மேலும் பல தகமைகள் வளரும். அதைவிட நாடகங்களைப் பார்ப்பதிலும் சரி நடிப்பதிலும் சரி மனமகிழ்ச்சி ஏற்படும். கவலைகள் மறக்கப்பட்டு இன்பம் குடிகொள்ளும். நகைச்சுவை உணர்வு ஒரு அருமையான உணர்வு அந்த உணர்வு உடையவர்கள் பாக்கியசாலிகள். அவர்களால் துன்பத்திலும் இன்பம் காண முடிகிறது. நகைச் சுவையுடன் நாடகத்தையும் எழுதுவது மட்டுமன்றி, அதை நயம்பட நடிப்பதும் ஒரு தனிக்கலை அத்தகைய நாடகங்களை இரசிக்கவும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

நாடகங்களினால் நடிப்பவர்களும், பார்வையாளர்களும் நிறையப் பயன்களைப் பெறுகின்றனர். நாடகத்திற்கு ஒரு நெறியாளர் மிக அவசியம். எனவே நாடகங்களில் ஒட்டு மொத்தமாக மனித உணர்வு பல மாற்றங்களை எதிர் நோக்கியது. நாடகங்கள் சமூக மாற்றங் களைப் பிரதிபலிக்கும் போது அல்லது ஒரு செய்தியைக் கையளிக்கும் போது வெற்றியைத் தழுவிக்கொள்கின்றன.

# நீ வளர்க பல்லாண்டு!

ஐம்பதாம் அகவை தொட்டு
அன்னையின் அருளைப் பெற்று
மத்தியில் கொடியை நட்டு – எட்டு
திக்கெங்கும் மேளம் கொட்டு!

சக்தியின் அருளும் பக்தியின் மெருகும் – கல்வி
கற்றிடும் தமிழும் கலைமீட்டிடும் யாழும்
சித்திரம் மேவிடும் சிறப்புடை கோண்டாவிலில்
மற்றவர் கனிந்தொழுக காலையில் குயில் இசைக்கும்1

சிறந்த நல்ஊராம் சிவகாமி துணையிருக்க
பரந்த மனத்துடனே பண்புடையோர் பெருமைகொள்ளும்
ஒற்றுமை ஓங்கி நிற்கும் உயர்ந்திட்ட ஊரிதுவே
நற்றமிழ் வளர்ந்திடவே நம்மவரே துணையிருப்பீர்!

வித்தகத் தமிழ்வாணர் விளைந்திட்ட நிலமிதுவே
சுற்றமும் சூழநின்று சொல்லிடும் பெயர் இதுவே
மத்திய கிராம முன்னேற்றச் சங்கமின்று
சத்திய வழியில் நின்று சாதித்த பெயர் உண்டு!

பெற்றோரும் அற்றோரும் பேணிவந்த கலைக்கூடம்
பொன்விழா கண்டது பூமியே பாடிநின்றது
புதுப்பொலிவு பெற்றது.
இரண்டாயிரத்து பத்தென்று புதுஆண்டு பிறந்தது – எம்
மத்திய கிராம முன்னேற்றச் சங்கபொன்விழா மலர்ந்தது
மகிழ்வைத் தந்தது மரங்களே பூச்சொரிந்தது!

மத்தியில் முகம் மலர்ந்து மக்களின் மனம் கவர்ந்து
கல்வி கற்றிடும் கலையில் சிறந்த கலைமகள் அருள்புரிய
விளைநில விவசாயமென நாங்கள் வாழ்வினை நோக்கி
கல்விப்பயிரினை நட்டு பல்கலைக்கழகம் புகுவோம்!

இளையவரே கண்திறவும் இனியவாழ்வு உமக்காக
பழமையை விட்டுத்தள்ளும் பண்பினைப் பழகிக் கொள்ளும்
புலமையும் வறுமையும் புடம்போட்ட பொன்போல
பொன்விழா மலர்ந்தது உமக்கு புதுவாழ்வு தந்தது
வாரீர்! சேர்வீர்! வளம் பெறுவீர்!!!

– லண்டனிலிருந்து....
ஊரோன்.

# ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கு ஆசிரியரினதும் பெற்றோரினதும் பங்களிப்பு

மனித சமூதாயத்திற்கு இன்றியமையாத தாக கல்வி விளங்குகின்றது. மனிதனை சமூகப் பொருத்தப்பாடு உடையவனாகவும் திறமை யுடைய வனாகவும் ஆக்கும் சக்தி கல்விக்கே உரித் தாகும் குழந்தை தாயின் வயிற்றில் இருக்கும் பொழுதே கற்றுக்கொள்ள ஆரம்பிக்கின்றது. என்பது தற்போதைய ஆய்வுகளின் முடிவாகும். இவ்வாறு குழந்தையொன்று, தாயின் கருவறை யில் தொடங்கி தன் கற்றலை ஆரம்பித்தாலும், தனது ஒழுங்கு முறையான கற்றலைத் தொடங் கும் இடம் முன்னாராம்பப் பள்ளிகளும், ஆரம்பக் கல்விக் கூடங்களுமே ஆகும்.

இலங்கையின் இன்றுவரை முன்னாரம்பக் கல்விப் பொறுப்பினை அரசு ஏற்றுக் கொள்ள வில்லை. ஆனால் முன்னாரம்பக் கல்வி அவசியம் என்பதனை ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே இங்கு முறையான கலைத்திட்டங்களுடன் கல்வி தொடங்கும் இடம் ஆரம்பக் கல்விப் பிரி வாகவே உள்ளது. இவ் ஆரம்பக்கல்வி ஒரு மனிதன் தன் உயர்கல்விக்கும், வளமான வாழ் விற்கும் இட்டுக்கொள்ளும் உறுதிமிக்க அத்திவார மாக விளங்க வேண்டும். தற்போது ஆரம்பக் கல்விக்குரிய வயது ஆறு தொடக்கம் பத்து வயது வரையும், தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1999ஆம் ஆண்டிலிருந்து நாடளாவிய ரீதியில் ஆரம்பத் தரங்களிலும், இடைநிலைத் தரங்களிலும் புதிய கலைத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப் படுகிறது. இதில் ஆரம்பக் கல்விக்குரிய ஐந்து வகுப்புகளும் மூன்று முதன்மை நிலைகளாக பாகுபடுத்தப்படுகின்றது.

முதன்மைநிலை 1: தரம் 1, தரம் 2
முதன்மைநிலை 2: தரம் 3, தரம் 4,
முதன்மை நிலை 3: தரம் 5.

தரம் 1 இல் அனுமதி பெறும் மாணவரின் நுழைவுத்திறன் விளையாட்டுக்கள், செயற் பாடுகள் மூலம் இனம் காணப்படுகின்றது. அத்துடன் பிள்ளை தொடர்பான பல விபரங்கள் பெற்றோரிடமிருந்து பெறப்படுகின்றன. இவற்றை நோக்கும் போது ஆரம்பக் கல்வி சிறப்பாக அமைய பெற்றோரினதும் ஆசிரியரினதும் ஒத்துழைப்பும், செயற்பாடும் முக்கியமானதாகும்.

ஆரம்பக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பிள்ளையை அரவணைக்கும் தாய் போல் நடந்து கொள்ளல் வேண்டும். பொறுமையுடன் அவர் களின் வினாக்களுக்கு விடையளிப்பவர்களா கவும், வழிகாட்டப்பட்ட விளையாட்டுக்கள் மூலமும் செயற்பாடுகள், மேசைவேலை (எழுத்து வேலை) மூலமும் அவர்களைக் கற்பதற்கு பயிற்றுவிப்ப வராகவும் இருத்தல் வேண்டும். இவ்வகுப்பு மாணவர்கள் ஆடல், பாடல்களையும் மிகவும் விரும்புவார்கள். எனவே ஆசிரியர்கள் அவற்றைச் சொல்லிக் கொடுப்பதற்கான தங்கள் திறமை களை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆரம்பக் கல்வி கலைத் திட்டமானது பெரும்பாலும் தனி ஒரு ஆசிரியரால் சகல வசதிகளும் உள்ளதாக வகுப் பறையில் செயற்படுத்தப்பட வேண்டியுள்ளது. அத்துடன் மொழி, கணிதம், சமயம், சூழல் சார் செயற்பாடுகள் என நான்கு புலங்களை அடக்கிய

அத்தியாவசியமான கற்றல் கூறுகள், விருப்பத் திற்குரிய கற்றல் கூறுகள் எனக் கலைத்திட்டம் அமைந்துள்ளது.

புதிய கலைத்திட்டமானது ஆசிரியர் மூலம் மாணவர்களிடத்தில் தொடர்பாடல், சூழல் ஒழுக்க வியலும், சமயமும், விளையாட்டும் ஓய்வும், கற்கக் கற்றல் ஆகிய தகைமைகளை உருவாக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றது. இந்த நிலை யில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள், மாணவர் மையக்கல்வியைக் கற்பிப்பதற்கான தம்திறமை களை விருத்தியாக்கிக் கொள்ள வேண்டும். பொறுமை, அன்பு, சகிப்புத்தன்மை ஆகிய சீரிய குணங்களைக் கொண்டவர்களாக இருக்க வேண்டியது அவசியமாகும். அத்துடன் பல்வேறு சூழல்களிலிருந்தும், பல்வேறு குண வேறுபாடு களுடன் பாடசாலை வரும் பிள்ளைகளைப் பாடசாலைக்குப் பொருத்தப்பாடு உடையவராக மாற்ற வேண்டியதும் ஆசிரியரின் பொறுப்பாகும்.

ஆரம்பக் கல்விச் செயற்பாட்டில் பெற்றோர் களின் பங்கும் குறிப்பிடத்தக்க அளவில் இருத்தல் வேண்டும். தரம் ஒன்றில் நடைமுறையிலுள்ள பிள்ளையை அறிவோம் என்ற திட்டம் பெற்றோர் களின் உதவியுடனேயே நடைபெறுகின்றது. மாணவர்கள் கூடுதலான நேரம் பெற்றோர் களுடன் கூட இருக்கின்றார்கள். ஆகவே பெற் றோர்கள் அவர்களின் கல்வியில் பெரும் பங் கேற்க வேண்டியது கட்டாயமாகும். பிள்ளைகள் பெற்றோரால் மகிழ்விக்கப்பட வேண்டும். அவர்களின் சுயகற்றலுக்கான செயற்பாடுகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். வீடு கட்டுதல், மண்ணைப் பிசைந்து உருவங்களை ஆக்கல், சித்திரங்கள் வரைதல், ஆடுதல், பாடுதல், தராசு போன்ற பொருட்களை ஆக்கல் போன்ற செயற் பாடுகளில் பிள்ளைகள் ஈடுபடும் போது தடுக்காது அவர்களின் செயற்திறன் விருத்திக்கு அனு சரணையாகச் செயற்படல் வேண்டும்.

பிள்ளைக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களு டன் கலந்துரையாடி பிள்ளைகளின் எதிர்காலம் வளம்பெறத் தேவையான கல்வியைப் பெற உதவவேண்டும். தரம் I, தரம் II ஆகிய முதன்மை நிலை இல் மிகவும் இறுக்கமாகப் பேணப்பட வேண்டிய நிலையில் பெற்றார், ஆசிரியர் கலந்துரையாடல் விளங்குகின்றது. இவ்வாறு எல்லோரும் தங்கள் பொறுப்புக்களையும், கடமை களையும் நிறை வேற்றும் போது இலங்கையில் ஓர் வளம் மிக்க சமுதாயம் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

## பொது அறிவுத் துணுக்குகள் சில


- இலங்கையின் முதலாவது சமாதானக் கிராமம் பொலநறுவை பில்லதடபிட்டுவவில் அமைக்கப்பட்டுள்ளது.
- இலங்கையின் 12வது பாராளுமன்றம் 07 பெப்ரவரி 2004 அன்று கலைக்கப்பட்டு புதிய நாடாளுமன்றம் 22 ஏப்ரல் 2004 இல் கூட்டப்பட்டது.
- 2006 உலகக் கிண்ண கால்பந்தாட்டம் ஜேர்மனியில் நடைபெற்றது.
- 2004 சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுக்கள் கிறீஸின் தலைநகர் ஏதேன்சில் நடைபெற்றது.
- அண்மையில் பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட நாடு இந்தியா
- அண்மையில் சீனாவில் ஏற்பட்ட விஷ வாயுக் கசிவினால் 300க்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர்.
- அடுத்த சார்க் மாநாடு பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் நடைபெறவுள்ளது.
- அணிசேரா நாடுகளின் மாநாடு 2003 மலேசியாவில் நடைபெற்றது.
- பிரதமர் ரணிலுக்கு "ஆசிய கதாநாயகன்" விருது ரைம்ஸ் சஞ்சிகையால் 11 யூன் 2003ல் வழங்கப்பட்டுள்ளது.


# G.S. LINGANATHAN & CO

## ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ.

சுப முகூர்த்தப் பட்டுப்புடவைகளின் சாம்ராச்சியம்








No: 13 - 14, Grand Bazaar,
Jaffna, Sri Lanka.


T.P: 0212223139



# முகேஸ் சைவ உணவகம்

சுத்தம் தரம் சுவை





மரக்கறி கேக், பூந்திலட்டு, றோள்ஸ், வடை, ஸ்பெசல் மரக்கறிப் புரியாணி
ஓடர்களுக்கு செய்து கொடுக்கப்படும்.

இராமநாதன் றோட்,
திருநெல்வேலி.

NEW
SHAHANAA
நியூ சகானா ரெக்ஸ்ரைல் TEXTILES



No: 100 Grand Bazaar,
Power House Road,
Jaffna.

இல: 100, பெரிய கடை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0776147418

ஸ்ரார் பான்சி ஹவுஸ்
STAR FANCY HOUSE

Dealers Fancy Goods & Gold Cavering





44 A, New Market (inside)
Jaffna.

44A, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

# அம்பாள் ஹாட்வெயர் அன்
## கட்டிடப் பொருள் விற்பனையாளர்

கருங்கல்சல்லி, சீமேந்து, மணல், சீற், ஓடு என்பன விற்பனைக்குண்டு.
இவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.





**அம்பாள் ஹாட்வெயர் அன்**
**கட்டிடப் பொருள் விற்பனையாளர்**

51, பலாலி றோட்,
உரும்பிராய்.



மத்திய கிராம முன்னேற்றச் சங்க, மத்திய சனசமூக நிலையத்தின்
இன்றைய பொன்விழா நிகழ்வுகளை இணையத்தளத்திலும் பார்த்து மகிழுங்கள்.....

புலம்பெயர் உறவுகளுக்காய்
தினமும் கோண்டாவில் மண்ணிலிருந்து உறவாடுகின்றோம்...





**வாகீசம்**
***www.vakessam.lk***

**வாகீஸ்வரி**
***www.vakeesvary.lk***

**இணையத்தளங்களூடாக**

உங்கள் விசேட வைபவங்கள், வாழ்த்துக்கள், அஞ்சலிகள், மரண அறிவித்தல்கள்
போன்ற நிகழ்வுகளைப் பதிவு செய்து உங்கள் உறவுகளுக்குத் தெரியப்படுத்துங்கள்.


தொடர்புகளுக்கு

மின்னஞ்சல்:- *vakeesam@gmail.com*
*vakeesvary@gmail.com*

தொலைபேசி: 0789139646

கோண்டாவில் தில்லையம்பதி
மத்திய கிராம முன்னேற்றச் சங்க மத்திய சனசமூக நிலைய
பொன்விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.

# உதயன் போட்டோ
# UTHAYAN PHOTO





அனைத்து விதமான விழாக்களையும் டிஜிற்றல் தொழில் நுட்பமுறையில்
புகைப்படம் பிடித்திட யாழ் நகரில் முன்னோடிகளான

உதயன் போட்டோ

தில்லையம்பதி
கோண்டாவில்.


T.P: 0776918106

அல்பம் செய்து கொடுக்கப்படும்.



# தில்லையம்பதி மோட்டோர்ஸ்

நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனையாளரும் அதன் உதிரிப்பாக ஏக விநியோகஸ்தர்களும்
புல்லு வெட்டும் இயந்திரங்கள், தெளி கருவிகள் போன்றவற்றை
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.




வடமாகாணம் ஏக விநியோகஸ்தர்கள்

தில்லையம்பதி மோட்டோர்ஸ்
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# விசர்நாய்கடி நோய்

**மரணத்தை விளைவிக்கும் அபாயகரமான விசர்நாய்கடி நோய்**

உங்கள் இல்லத்தில் செல்லமாக வளர்க் கப்படும் மிருகங்கள் விசர்நாய்க்கடி நோயி லிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளனவா?

விசர்நாய்கடி நோய் என்பது பாலூட்டும் பிராணிகளுக்கு வைரஸ் பரவும் நோயாகும். அது மரணம் ஏற்படுத்தக் கூடியது.

இந் நோய் அநேகமாக நாய்களிலிருந்து மனிதனைப் பீடிக்கின்ற போதிலும் இந்நோயை ஏற்படுத்தக்கூடிய வேறு பிராணிகளும் உண்டு.

விசர்நாய்கடி பீடித்த நாயொன்றின் நோய் குறிகள் இம்முறைகளில் தோற்றமளிக்கலாம்.

**1. ஊமைச் சுயாதீனம்**

1. தொண்டையில் ஏதோ சிக்கியது போலக்காட்சி தரும்.
2. இருளான இடங்களில் மறைவாக் இருக்க முயலும்
3. உணவு அருந்த மறுக்கும்
4. தொடைகள் பலமற்வைகளாகத் தோற்ற மளிக்கும்

இந்நிலமை காணப்பட்டால் விசர்நாய்க்கடி நோய் எனத் தீர்மானிக்க முடியாமலும் இருக்கும்.

**2. கடும் கோபம் கொண்ட விசர்**

1. உணவு உண்ணாமல் நோய் சுபாவத்துடன் காணப்படும்.
2. உரத்த குரலில் குரைக்கும்.
3. வழக்கத்துக்கு மாறாக ஒழுகும்
4. எல்லாப் பொருட்களையும் (கூண்டின்கம்பி, பலகை) கடிக்கும்.
5. கண்கள் சிவந்து விசாலித்து ஒளிரும்.
6. வாயினின்றும் சளி வழிந்தோடும்.
7. வருவோர் போவோர் அனைவரையும் கடிக்கும்.
8. தொடைகள் பலவீனமாகக் காணப்படும்.

மேலேகுறிப்பிட்ட இருவகைக் குணங் குறிகள் காணப்பட்டால் நாய் கண்டிப்பாக 10 நாட்களில் இறந்து விடும்.

**இந்நோய் உங்களுக்கு தொற்றுவது எவ்வாறு?**

நோய் வாய்ப்பட்ட பிராணி உங்களைக் கடித்தால் அதன் எச்சில் உங்கள் சளிப்படலங் களுடன் அல்லது காயங்களில் பட்டால் பரப்பும் வைரஸ் உடம்பினுள் செல்லும்.

**நாயொன்று அல்லது வேறொரு பிராணி கடித்தால்**

1. காயத்தை சவர்க்காரம் பூசி ஓடும் நீரில் கழுவி விடவும்.
2. சந்தேகமான பிராணியொன்று கடித்தால் அண்மையில் உள்ள அரசாங்க வைத்தியரின் அறிவுரையின்படி உரிய சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளவும்.
3. காட்டுப் பிராணியொன்று கடித்தால் அல்லது கடித்த நாயைத் தேடிக்கொள்ள இயலாத விடத்து மருத்துவ சிகிச்சை பெறுவது அத்தியாவசியமாகும்.

**விசர்நாய்க்கடி நோயைத் தடுப்போம்**

1. 5வாரங்களுக்கு மேற்பட்ட வயதுள்ள சகல நாய்களுக்கும் வருடத்துக்கு ஒரு முறை பால் கட்டுங்கள்.
2. 5வாரங்களில் பால் கட்டிய போதிலும் 3 மாதங்களின் பின்பு மீண்டும் பால் கட்டுங்கள்

3. கட்டாக்காலி நாய்களை அகற்றுவதற்கு உதவி செய்யுங்கள்.

**கீழே குறிப்பிட்ட எந்தச் சந்தர்ப்பத்திலும் வக்சீன் பெற்றுக் கொடுக்கலாம்**

1. குட்டி ஈனும் பருவத்தில்
2. குட்டிகளுக்குப் பாலுட்டும் பருவத்தில்
3. நோய் ஆரம்ப நிலைமையில் இருக்கும் போது

விசர்நாய்கடி நோய் வக்சீன் பற்றிய அறிக்கைளை கவனமாக வைத்திருந்து அடுத்த தடவை கொண்டு செல்லவும்.

1. வீட்டில் வளர்க்கப்படும் நாய்களை அலைந்து திரிய விடவேண்டாம்.
2. நீங்கள் வீசும் உணவுகள் கட்டாகாலிகள் பெருக உதவாவண்ணம் அப்புறப்படுத்துங்கள்.
3. தேவையற்ற குட்டிகள் பெருகுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை செய்யுங்கள்.
4. வேட்கை ஏற்படும் காலத்தில் ஆண் பெண் நாய்களை வேறாகக் கட்டி வைக்கவும்.

கருத்தடை வக்சீனுக்கும் மலட்டு சத்திர சிகிச்சைக்கும் விலங்கு வைத்தியரின் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்ளவும்.

விசர்நாய்கடி நோயிலிருந்து நீங்கள் வளர்க்கும் அன்பான மிருகங்களைப் பாதுகாத்துக் கொள்வதன் மூலம் குடும்பப் பாதுகாப்பையும் நிச்சப்படுத்திக் கொள்ளலாம்.

## ஏற்புவலி

சிறிய காயங்களினாலும் ஏற்பு வலி ஏற்படலாம். நம் அன்றாட வாழ்வில் துருப்பிடித்த கம்பிகள், ஈர்க்குகள், தடிகள், மண்வெட்டி போன்ற ஆயுதங்கள் விலங்குகளின் பற்கள், நகங்கள், நெருப்பு போன்றவற்றால் ஏற்புவலி ஏற்படலாம்.

**இந்நோய்வராமல் தடுப்பது**

உங்களுக்கு காயம் ஏற்பட்ட போது 10 வயதுக்கு உள்ளானால் முக்கூட்டு, இருகூட்டு தடுப்பு மருந்துகளை பிள்ளை பிறந்து 3வது மாதம், 7வது மாதம். 18வது மாதம், 60வது மாதங்களில் ஒழுங்காக பெறப்பட்டிருப்பின் தடுப்பூசி அவசியமற்றது. இதனை அம்மா காட் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.

உங்களுக்கு காயம் ஏற்பட்டபோது வயது 10 வயதுக்கு மேலாக இருந்தால் பாடசாலையில் 10-14 வயதில் தடுப்பூசி போடாவிட்டால் முழுமையான முறையில் ஏற்பூசி (Tetanas) பெறப்படவேண்டும்.

முதலாவது ஊசி
↓
6வது இழமையில்
↓
இரண்டாவது ஊசி
↓
6 மாதத்தின் பின்
↓
3வது ஊசி

மூன்று ஊசிமருந்துகளும் ஒழுங்காக பெறப்பட்டிருந்து மீண்டும் காயம் ஏற்பட்டால்.

5 வருடத்திற்கு தடுப்பூசி அவசியமற்றது

5 - 10 வருடங்களுக்குள்ளானால் ஒரு தடுப்பூசி (Booster Dose) போதுமானது.

10 வருடங்களுக்கு மேலானால் மீண்டும் முழுமையான முறையில் தடுப்பூசி போடப்பட வேண்டும். கடைசியாக ஏற்பூசி (T.T) Nபாட்ட நாள் ஞாபகத்தில் வைத்திருந்து வைத்தியரிடம் கூறுதல் வேண்டும்.

# சலரோக நோயாளிக்கான உணவு பற்றிய ஆலோசனை

## அறிவுறுத்தல்

சலரோக நோயாளிகளின் சிகிச்சையில் உணவுக் கட்டுப்பாடு மிக முக்கிய பங்காற்று கிறது. இக்குறிப்பேட்டில் உள்ள ஆலோசனைப் படியே உணவைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இக்குறிப்பேடு பலவிதமான மாற்று உணவு வகைகளைக் கொண்டுள்ளது. அதி லிருந்து உங்கள் ரசனைக்கேற்ப உணவுப் பதார்த் தங்களைத் தேர்ந்தெடுக்க முடியும். ஆனால் அவ்வாறு தேர்ந்தெடுக்கும் போது அடிப்படை உணவின் அளவுகளை மாற்ற முற்படக்கூடாது.

## பிற்குறிப்பு

- ஒரு தம்பளர் / கப் 200மி.லி. கொள்ளளவு உடையது. இவற்றைக் கொண்டு உணவின் அளவை அண்ணளவாக நிர்ணயிக்கலாம்.
- நார்ப்பொருட்கள் அதிகம் உள்ள உணவுப் பொருட்களை உட்கொள்ளல் நன்று. (தீட்டாத தானியம் அவரைவகை, மரக்கறி பழவகை என்பவற்றில் போதிய அளவு நார்ப்பொருள் உண்டு.
- பால் – கொழுப்பு நீக்கியது
- மரக்கறி 1 எனக் குறிப்பிடப்பட்ட உணவு வகையில் ஏதாவது ஒன்றை விரும்பிய அளவு உண்ணலாம்.
- மரக்கறி 2 எனக் குறிப்பிடப்பட்ட உணவு வகையில் ஏதாவது ஒன்றை அரைக் கப் மட்டும் உண்ணலாம்.

**சலரோக நோயளிக்கான உணவு (1500 kcal)**

### காலை உணவு

பால் ½ கப் (சீனி சேர்க்காது தேனீர் அல்லது கோப்பியுடன்)

தானிய வகை (50g) பின்வருனவற்றில் ஏதாவது ஒன்று

| | |
|---|---|
| தோசை அல்லது இட்லி | – 2 |
| இடியப்பம் | – 3 |
| பிட்டு | – 2 |
| பாண் | – ¼இறா |
| உப்புமா | – 1கப் |

### பின்காலை

| | |
|---|---|
| கதலி வாழைப்பழம் | – 1 |

### மதிய உணவு

| | |
|---|---|
| சோறு (75 g) | – 1½ கப் |
| அசைவம் | – மீன் 2 துண்டு |
| இறைச்சி | – ½ |
| | – கப்/முட்டை |
| பருப்பு | – ½ கப் |
| தயிர் | – ½ கப் மரக்கறி |
| மரக்கறி 1 | – விரும்பிய அளவில் |
| மரக்கறி 2 | – ½ கப் மட்டும் உண்ணக்கூடியவை. |

### தேனீர் வேளை

பால் ½ கப் (சீனி சேர்க்காது தேனீர் அல்லது கோப்பியுடன்) 2 கிறீம்கிறக்கர் அல்லது ¼ கப் சுண்டல்

### இரவு உணவு

| | |
|---|---|
| தானிய வகை – | இடியப்பம் பிட்டு பாண் உப்புமா (மேற் கூறிய அளவுகளில்) |
| கறி வகை – | மதிய உணவைப் போல் |

### படுக்கை நேரம்

பால் 1 கப் (சீனி சேர்க்காது)

❖ *வாழைப்பழத்திற்குப் பதிலாக உண்ணக் கூடிய பழவகை*

ஜம்பு 20 (சிறியது) - விளாம்பழம் 1

கொய்யா 1 - புளித்தோடை 1 (நடுத்தரம்)

பப்பாளிப்பழம் 2"x 3" துண்டு 1

❖ *மரக்கறி 1*

| | | |
|---|---|---|
| கோவா | - காய்ப்பப்பாசி | - வெந்தயம் |
| சிறுகீரை | - பாகற்காய் | - கத்தரி |
| தக்காளி | - போஞ்சி | - புடலங்காய் |
| வாழைப்பூ | - மிளகாய் | - வெண்டைக்காய் |

❖ *மரக்கறி 2*

| | |
|---|---|
| அகத்தி | - பீற்றூட் (பச்சையாக) |
| முருங்கைக்காய் | - கரட் (பச்சையாக) |
| முருங்கை இலை | - வெங்காயம் |

### விரும்பிய அளவில் உண்ணக்கூடியவை

| | |
|---|---|
| தெளிந்த சூப் | - தக்காளி |
| எலுமிச்சை | - கோவா |
| மரக்கறி சலட் | - சீனி சேர்க்காத தேனீர் அல்லது கோப்பி |
| பலசரக்கு வகை | - அச்சாறு |

### முற்று முழுதாக தவிர்க்க வேண்டியவை

| | |
|---|---|
| சீனி | - குளுக்கோஸ் |
| சர்க்கரை | - பணாங்கட்டி |
| ஜாம் | - பழரசம் |
| தேன் | - இனிப்பூட்டிய பானம் |
| கேக் | - ஹோர்லிக்ஸ் |
| சொக்கலேற் | - வீவா |
| இனிப்பு வகை | - நெஸ்டரமோல்ற் |
| குளிர்பானம் | - புரொட்டினெக்ஸ் |
| | - மைலோ |

## சலரோக நோயாளி கவனத்தில் கொள்ள வேண்டியது

1. உணவுக் கட்டுப்பாடு மிக அவசியம்
2. தவறாது மாதாந்த வைத்திய பரிசோதனைக்கு செல்ல வேண்டும்.
3. காயங்கள் ஏற்படுவதை கூடிய அளவில் தவிர்க்க வேண்டும்.
4. கால் நகங்களை வெட்டி சுத்தமாக வைத் திருப்பதுடன் வெளியே செல்லும் போது உடனடியாக பாதணி அணிய வேண்டும்.
5. காயங்கள் ஏற்படும் பட்சத்தில் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும்.
6. வைத்திய குறிப்புப் புத்தகத்தை எப்போதும் தன்னுடன் வைத்திருக்க வேண்டும்.
7. மருந்துக் குளிசை ஊசி போன்றவற்றை வைத் தியர் கூறியபடி ஒழுங்காக எடுக்க வேண்டும்.
8. வைத்தியரின் ஆலோசனையின்றி மருந்தின் அளவை கூட்டவோ குறைக்கவோ முயலக் கூடாது

### இரத்தத்தில் சீனிச்சத்து குறையும் போது ஏற்படும் அறிகுறிகள்

படபடப்பு

அதிக சோர்வு

தலையிடி

அதிக வியர்வ்வ

வலிப்பு

தலைச்சுற்று மயக்கம்


நோயாளி அல்லது அருகில் இருப்பவர் இவ்வறிகுறிகளைக் கண்டதும் நோயாளியின் வாயில் குளுக்கோஸ் அல்லது சீனியை இட வேண்டும். பின் உடனடியாக வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

நோயாளி எப்போதும் தன்னுடன் குளுக் கோஸ் வைத்திருப்பது நன்று

நன்றி - யாழ் போதனா வைத்தியசாலை
அபிவிருத்திச் சங்கம்.



அம்பிகை
கொம் நெற்
ஓடியோ, வீடியோ றெக்கோடிங்
அன் பான்சி
குமரகோட்டம்,
கோண்டாவில்.

ROOBAN
PHOTO & VIDEO
PENTAX
Kondavil North,
Kumaragoddam.
Stashan Road,
Kondavil.
T.P: 0776702436

# தேனு களஞ்சியம்

# THENU KALANCHIYAM




இல.29, நவீன சந்தை (உட்புறம்)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.






VIJAY SILK
விஜய் சில்க்
திருமணப் பட்டுப் புடவைகள், பட்டு வேஷ்டிகள், சேலை ரகங்கள்,
சல்வார் சுடிதார் ரகங்கள், குழந்தைகள், சிறுவர்களுக்கான
நவீன ரக ரெடிமேட் ஆடைகள், மற்றும் சூட்டிங்ஸ்,
சேர்ட்டிங்ஸ் வகைகள் தரமாகவும், விலை குறைவாகவும் கிடைக்கும்.
தொலைபேசி: 0212226162
இல.123, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.





கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச் சங்க
50வது ஆண்டு விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.
BALA DIGITAL VIDEO
பாலா டிஜிற்றல் வீடியோ
Thillaiyampathy,
Kondavil.
தில்லையம்பதி,
கோண்டாவில்.
தொலைபேசி: 0213210894

# KARUSAN TAILORING
# காருசன் தையலகம்

ஆண்கள், பெண்களுக்கான ஆடைகளைச்
சிறந்த முறையில் குறித்த தவணையில் தைத்து பெற்றுக்கொள்ள
டுங்கள்.





உரிமையாளர்:
இ.பாலகுமார்

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

# GAJEN FANCY
# கஜன் பான்சி






54, A, நவீன சந்தை
(உட்புறம்) யாழ்ப்பாணம்.

54,A, New Market,
Jaffna.

# சூழல் மாசடைதல் அணுகுண்டை விட பெரும் ஆபத்தானது!

மாசடைந்து வரும் சூழலும், சுருங்கி வரும் உயிரின பல்வகைமையும் மனிதகுல ஆரோக்கியத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக தோன்றியுள்ளன. இயற்கைச் சமநிலையை பேணி வரும் பல்வகை உயிரினங்களினதும் தாவர வர்க்கங்களினதும் ஆரோக்கியத்தில் தான் மனித இன சுகாதாரம் தங்கியுள்ளது. உயிரின பல்வகைமை சீர்குலைந்தால் மருந்துகள் தயாரிக்கத் தேவையான மூலப் பொருட்கள் பெரிதும் அருகி விடும். எனவே மனித இன ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு உயிரின பல்வகைமை சீரழியாது இயற்கைச் சமநிலை பாதுகாக்கப்பட வேண்டும் என்பது மிக முக்கியம். எனவே அண்மையில் இங்கிலாந்தில் வெளியடப்பட்ட "பேண்தகு உயிரினமும், உயிரியல் பல்வகைமையில் தங்கியிருக்கும் மனித ஆரோக்கியமும்" என்னும் நூலில் அதன் ஆசிரியரும், அணு ஆயுத போர் எதிர்ப்பு வைத்தியர்களின் சங்கத் தலைவருமான சத்திர சிகிச்சை நிபுணர் "சிவியன்" குறிப்பிட்டிருக்கிறார்.

இப்பாரிய சூழல் பிரச்சினை, எழுந்ததின் முக்கிய காரணம், நாம் மனித வர்க்கம், மற்றைய இயற்கை உயிரினங்களிலிருந்து வேறுபட்டது என்னும் தப்பபிப்பிராயத்தின் விளைவே இதை சிறந்த தற்போதைய அறிவியல் பூர்வமான சான்றுகளுடன் மனித இன ஆரோக்கியம், மற்றைய உயிரினங்களின் சுகாதாரத்திலும் இயற்கையின் ஆரோக்கியமான இயக்கத்திலும் தங்கியிருக்கிறது என அந்த நூலில் தெளிவாக விபரித்திருக்கிறார் சிவியன்.

1969 -71 ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா சுப்பர் சோனிக் விமானங்களை தயாரிக்க வேண்டுமா? என்று நடத்தப் பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு, முதன் முதலில் விமானங்களின் புகை ஓசோன் மண்டலத்தை நலிவடையச் செய்யும், அதன் விளைவாக மனித சமுதாயத்திற்கு தோல் நோய்கள், புற்றுநோய் போன்ற பாரிய பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புண்டு என அடித்துக் கூறியவர் சிவியனே.

சூழல் பிரச்சினைகள் யாவும் வெகுஜன ஆரோக்கியப் பிரச்சனைகள். எனவே வைத்தியர்களே மிகவும் சக்தி வாய்ந்த நியாயவாதிகள் மக்களை இப்பிரச்சினையில் விழிப்படையச் செய்வதில் அவர்களே முன் நின்று பிரசாரம் செய்ய உகந்தவர்கள் என எண்ணிச் செயற்பட்டார் சிவியன். அணுமின் நிலையங்களால் ஏற்படும் தீய விளைவுகள் பற்றி அவர் ஒரு குழுவாக இணைந்து போர்க் கொடி தூக்கிய வேளை தற்செயலாக திறீ மைல் தீவிலுள்ள அணுமின் நிலையத்தில் பாரிய விபத்து ஏற்பட்டு பலரைக் காவு கொண்டதுமல்லாது, பெருவாரியான மக்களும் பாதிப்பிற்குள்ளானர்கள். இதைத் தொடர்ந்து அவரது குழு சர்வதேச ரீதியாக புகழடைந்தது. 1980 களில் "அணு ஆயுதப் போர் எதிர்ப்பு சர்வதேச டாக்டர்கள் சங்கம்" எனப் பெயர் பெற்று, அதன் நடவடிக்கைகளை விஸ்தரித்தது.

1988 இல் மாசடையும் சுற்றுப்புறச் சூழலை யிட்டு தனது கவனத்தைத் திருப்பினார். "சூழல் மாசடைதல் வெளியே பெரிதும் தோன்றாமல் மெதுவாக நடைபெறுகிறது. அதன் முழுமையான பாதிப்பை அறிவதற்கு சில வருடங்களோ அல்லது

நூறு ஆண்டுகளோ செல்லலாம். இருப்பினும் அது நிச்சயமாக மனிதகுல ஆரோக்கியத்தைக் கெடுத்து பூமியில் மனித வாழ்வை அஸ்தமிக்கச் செய்துவிடும்" என எச்சரிக்கை விடுக்கிறார் சிவியன்.

உயிரியல் பல்வகைமை மனித இன ஆரோக்கியத்தில் எவ்வகைத் தாக்கத்தை விளை விக்கிறது என்பதை பல மக்கள் அறிந்திருக்க வில்லை. முக்கியமாக இது காலநிலை மாற்றத் தைக் கொண்டு வருவதால் தற்போது அதிக கவனத்தை பெற்றிருக்கிறது. உலர் வலயக் காடுகளை அழிப்பதாலும், எரிப்பதாலும் மூலிகை கள் அழிந்து, அவற்றிற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படுகின்றது என்பதை மக்கள் அறிந்திருந் தாலும் சமுத்திரத்தில் வாழும் பிராணிகள் மற்றும் நுண்ணுயிர்களால் பெறப்படும் மருந்து வர்க்கங் களைப் பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லை. இவ் அறிவை விசாலப்படுத்துவதற்குரிய சகல நட வடிக்கைகளையும் நாம் எடுக்க வேண்டும். மேலும் மருந்து வளங்கள் என்னும் குறுகிய வட்டத்திலிருந்து மக்கள் வெளியேறி சூழலும் உயிரியல் பல்வகைமையும் என்பன பற்றி நன் றாக ஆராய்ந்து அறிவது மிக முக்கியம் என்கிறார் சிவியன்.

1999 இல் உலக சுகாதார ஸ்தாபனம் சிவியனை, விஞ்ஞானிகளைக் கொண்டு உயிரி யல் பல்வகைமைத் தன்மையின் தொடர்பு பற்றி அறிக்கை தயாரித்து தரும்படி கேட்டுக் கொண்டது ஏழு வருடங்களாக தயாரிக்கப்பட்ட அந்த அறிக் கையில் பல விசேஷ தகவல்கள் அடங்கியிருந் தன. தொற்று நோய் பரவுதலிலும் நிலம் மற்றும் கடல் உணவுகள் தயாரிப்பிலும் எவ்வாறு உயிரி யல் பல்வகைமை செல்வாக்குச் செலுத்துகின்றது மற்றும் நுண்ணுயிர்கள் அழிந்து போனால் மருந் துத் தயாரிப்பில் எவ்வகை பாதிப்புக்கள் ஏற்படும் என்பதை அந்த அறிக்கை விபரித்திருந்தது.

அமெரிக்காவில் டாக்டர்கள் சிபார்சு செய்யும் மருந்துகளில் 50 வீதத்துக்கும் மேற் பட்டவை இயற்கை வளங்களிலிருந்தே பெறப்படு கிறது. உதாரணமாக உலகெங்கும் பரவலாக புழக் கத்திலிருக்கும் கொலஸ்திரோலை குறைவடையச் செய்யும் "ஸ்ராட்டின்" என்னும் பிரபல மருந்து பூஞ்சணம் மற்றும் பக்டீரியாவிலிருந்து தயாரிக்கப் படுகிறது. அஸ்பிரின் மாத்திரை, அலரி மரம் போன்ற ஒருவகைத் தாவரத்தின் மேற்பட்டையி லிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. எயிட்ஸ் நோய்க்கு கொடுக்கப்படும் மருந்து கடற்பஞ்சி லிருந்து தயாரிக்கப்படுகிறது.

ஆயுளைப் பேணுவதில் இத்தகைய பல உதாரணங்களை நாம் எடுத்துக் கூறுதல் சாத்தி யம். "விரியன் பாம்பு" எதிரியைக் கடிக்கும் வேளை கொடிய நஞ்சை ஏற்றி விடுகிறது. எதிரியின் இரத்த அழுத்தத்தை அந்த நஞ்சு குறைவடையச் செய்வ தால் எதிரி இறந்து போக நேர்கிறது. இதை அவதானித்த விஞ்ஞானிகள் அந்த நஞ்சை பிரித்தெடுத்து உயர் இரத்த அழுத்த வியாதிக்கு சிகிச்சையளிக்கும் முகமாக ஒரு புதிய மருந்தை தயாரித்திருக்கிறார் கள். நத்தைகளை மீன்கள் அணுகும் வேளை அவை குழாய் போன்ற சதைப் பகுதியை வெளியே நீட்டுகின்றன. இச்சதைப் பகுதியை மீன்கள் விழுங்க முற்படும் போது நத்தை ஒரு வகை நஞ்சை மீனுக்கு ஏற்றி அவற்றை செயலிழக்க வைத்து விடுகின்றன. இந்த நத்தையினத்தில் 700 வகைகள் உண்டு. இவற்றின் நஞ்சு வகைகளை விஞ்ஞானிகள் ஆராய்ந்த போது அவ்வகை நஞ்சுகள் உயிர் களை செயலிழக்கச் செய்வது மட்டுமல்ல, நரம்புத் தொகுதி வலி உணர்வை மூளைக்கு அனுப்பு வதையும், தடை செய்வதாகவும் கண்டறிந்தார்கள். எனவே இவற்றி லிருந்து வலி நிவாரணி மருந்தை தயாரிக்கும் முறையில் ஆய்வுகளை மேற் கொண்டு வருகிறார்கள். இருப்பினும் பூகோள வெப்ப உயர்வால் நத்தைகளின் வாழ்க்கை அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கிறது. மேலும் அழகான நத்தை ஓட்டை சேகரிப்பவர்களாலும் நத்தை இனம் அழிந்து வருகிறது.

எனவே இவ்வாறு விலைமதிப்பற்ற இயற்கை வளங்களை நாம் இழந்து வந்தால் மருந்துகள் தயாரிப்பில் பெரும் பாதிப்பு ஏற்படும். அதன் விளைவாக மனித இனத்தின் ஆரோக்கியத்தைப் பேணுதல் மிகவும் கஸ்டமான முயற்சியாக இருக்கும். இதேபோல் எத்தனையோ பாதிப்புகளை சிவியன் தனது நூலில் எடுத்துக் காட்டி "இயற்கைச் சூழலின் ஆரோக்கியமே மனித இன ஆரோக்கியம்" என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

17 வருடங்களுக்கு முன்பு றியோ உச்சி மாநாட்டில் பூகோள வெப்ப உயர்வைப் பற்றி கவலை தெரிவிக்கப்பட்ட வேளை அனைவரும் அதனை செவிமடுத்திருந்தால் இன்று உலகம் வித்தியாசமானதாக இருந்திருக்கும். இப்போதாவது சுருங்கி வரும் உயிரின பல்வகைமை மனித குல ஆரோக்கியத்திற்கு பெரும் அச்சுறுத்தல், "அணுகுண்டை விட அது ஆபத்தானது" என்பதை அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டியது அவசியமான தொன்றாகும்.

**நன்றி – இரசாயன உலகம்**

## நல்லதையே சிந்திக்கப் பிரார்த்தனை செய்வது எப்படி?

**"உங்களைப் பற்றிய உண்மை நிலவரங்கள் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும், ஆனால் மனோபாவம் ஒன்றுதான் வெற்றியைத் தீர்மானிக்கிறது"**

**"எப்போதும் இக்கட்டான நேரங்களிலும் மிகுந்த நம்பிக்கையுடன், நான் உண்மையாக நினைத்த நல்லது அனைத்தும் நடக்கும் என்ற மனோபாவத்துடன் வாழும் பழக்கத்தை நடைமுறையில் மேற்கொண்டால் வாழ்க்கை உங்கள் கட்டுப்பாட்டிற்குள் வந்து விடும்".**



# மனம் நிறைந்த நன்றிகள்



இப்பொன்விழா சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி தந்த பெருந்தகைகள், வாழ்த்துரை வழங்கிய சான்றோர்கள், கட்டுரை, கவிதை, பொன்மொழிகள் வரைந்த கல்விமான்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

சிறந்த முறையில் இம்மலரை வெளியிட்டு எமது ஆற்றல்களை வளர்த்துக் கொள்ள எம்மை ஊக்குவித்த வர்த்தக விளம்பரதாரர்களுக்கும், நிதி உதவி செய்த நலன் விரும்பிகளுக்கும், படப்பிடிப்பினை மேற்கொண்ட யானு, உதயன், ரூபன் போட்டோ உரிமையாளர்களுக்கும், மிகவும் குறைவான நாட்கள் இருந்த போதிலும் மலரினை தரமான முறையில் வடிவமைத்து அச்சிட்டுத் தந்த மதி கலர்ஸ் பிறிண்டேர்ஸ் உரிமையாளர், ஊழியர்களுக்கும் மேலும் பல வழிகளில் உதவி புரிந்து உழைத்த அனைவருக்கும் என்றென்றும் எமது மனம் நிறைந்த நன்றிகள்.


**நன்றி**

**மலர்க்குழு,**


**மத்திய கிராம முன்னேற்றச் சங்கம்**

**மத்திய சனசமூக நிலையம்**

**2010 தை**




மயில் டிஜிற்றல் ஸ்ருடியோ & அழகு நிலையம்
MDSBC
உள்புற வெளிப்புற படப்பிடிப்பு
அல்பம் கட்டுதல்
கிரபிக் டிசைனிங்
காட் டிசைனிங்
மணப்பெண் அலங்காரம்
பேசியல் (பல வகை)
ஸ்ரெயிற்னிங், பேமிங்
கேக் ஐசிங்
வக்சிங்
முகப்பரு சிகிச்சை
பெடிக்கியூர், மெனிக்கியூர்
கண் கருவளைய சிகிச்சை
அழகுக்கலை வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
உரிமையாளர் திரு, திருமதி M. றமேஸ்
Kodak GOLD 100
077 6914123, 021 4590730
வீரபத்திரர் வீதி, கோண்டாவில் வடக்கு. கோண்டாவில்
www.maildigital1980@yahoo.com




Printed by: Mathicolours, 021 2229285